இலக்கு
வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER
இதழ் 390
சனி, 09 மே, 2026 |
பக்கங்கள் 16
www.ilakku.org

# 2.5மில்லியன் டொலர்கள் மோசடி: திறைசேரியை சூழ்ந்து நிற்கும் மர்ம மேகங்கள்

விதுரன்



## தமிழக மக்களாணை பெற்றமைக்கு வாழ்த்து

தமிழக மக்களாணையில் பெரு வெற்றி பெற்றமைக்கு தமிழக வெற்றிக் கழகத் தலைவர் **யோசப் விஜய்** அவர்களுக்கு, அனைத்துலகத் தமிழ்ச் சமுக ஊடகமாகிய ‘இலக்கு’ தனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் சகோதரத்துவ மகிழ்ச்சி அடைகிறது. சகோதரத்துவ உரிமையுடன் ஈழத்தமிழரின் பாதுகாப்புடன் கூடிய அமைதி வாழ்வுக்கும் வளர்ச்சிக்குமான அவரின் இனத்துவக் கடமையை அவர் செய்திட வேண்டுகிறோம்.



# அந்த ஒரு பிடி மண்!

## இனப்படுகொலை நாட்களில் பெரும்பசி, பெருந்தாகம் தீர்த்த முள்ளிவாய்க்கால் ‘கஞ்சி’



தீபச்செல்வன்

# அழிவின் மூலம் அதிகாரம் என்பதற்கு பதிலாக சீர்குலைப்பின் மூலம் அதிகாரம்

வேல்ஸில் இருந்து அருஸ்

# தங்களின் காணியை விடுவிக்க கோரி, வலிகாமம் மக்கள் போராட்டம்!



வலிகாமம் வடக்கு பகுதியில் உள்ள மயிலிட்டி மற்றும் பலாலி பகுதிகளில் உள்ள தங்களது பூர்வீகக் காணிகளை வழங்குமாறு கோரும் மக்களின் போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகிறது. “எங்களை எங்களுடைய காணிக்குள் வாழத்தான் விடுகிறீர்கள் இல்லை எங்களை கடைசி நேரத்தில் ஆவது சாக விடுங்கள்” என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

36 ஆண்டுகளாக இடம்பெயர்ந்து நிற்கதியாக நிற்கும் நிலையில், தரைமட்டமாக்கப்பட்ட மயிலிட்டி காணிக்கு முன்னால் மூன்றாவது வாரமாக அமைதிவழி கவனயீர்ப்பு போராட்டத்தில் மக்கள் ஈடுபட்டுள்ளனர். இதன்படி தங்களது காணி தங்களுக்கு கிடைக்கும் வரை தங்களது போராட்டம் பல வடிவங்களில் நடைபெறும் என்றும் இந்த அரசாங்கம் தங்களுக்கான வாழ்வுரிமையை மீட்டுத் தர வேண்டும் என்றும் காணி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## தெற்கில் வைரஸ் தொற்று பரவல்: மூடப்பட்ட பாடசாலைகள்!




மாத்தறை - தெனியாய பகுதியில் மாணவர்களிடையே வேகமாகப் பரவி வரும் வைரஸ் காய்ச்சல் நிலைமையை ஆய்வு செய்ய விசேட மருத்துவக் குழுவொன்று அப்பகுதிக்கு செல்லவுள்ளனர்.

மாத்தறை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் சுமித் மனதுங்க இந்த விடயத்தை உறுதிப்படுத்தியுள்ளார். சுகாதார அதிகாரிகளின் பரிந்துரையின் கீழ் தெனியாய வலய கல்விப் பணிப்பாளரின் உத்தரவின் பெயரில், தெனியாய வலயத்தில் உள்ள நான்கு பாடசாலைகளை நேற்றும் (07) இன்றும் (08) மூட உத்தரவிடபட்டிருந்தது.

சம்பந்தப்பட்ட பாடசாலைகளில் உள்ள மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடையே வைரஸ் காய்ச்சல் அறிகுறிகள் அதிகரித்து வருவதால் இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எனினும், தற்போதைய நிலைமை பெருந் தொற்று மட்டத்திற்கு உயரவில்லை என மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் உறுதிப்படுத்தியுள்ளார்.

தொடர்ச்சி: பக்கம் 15

## அவசரகால நிலையை நீடிப்பதற்கான தீர்மானம்



அரசியல்வாதிகளுக்கு நட்டஈடு வழங்கப்பட்டமையை சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மனுவின் பிரதிவாதிகளில் ஒருவரான முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு மீண்டும் அறிவித்தல் அனுப்புமாறு உயர்நீதிமன்றம் நேற்று (08) உத்தரவிட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு மே மாதம் 9ஆம் திகதி ‘அரகலய’ போராட்டக்களத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து, நாடு முழுவதும் ஏற்பட்ட வன்முறைகளின் போது வீடுகள் தீக்கிரையாக்கப்பட்ட அல்லது சேதமடைந்த முன்னாள் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சட்டவிரோதமான முறையில் நட்டஈடு வழங்கப்பட்டுள்ள தாக அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு வழங்கப்படும் நிதியை மீள அறவிடுமாறும், குறித்த நட்டஈடு வழங் கப்பட்டமை சட்டவிரோதமானது என அறிவிக்குமாறும் கோரி தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே, கோட்டாபய ராஜபக்ஷவுக்கு புதிய அறிவித்தலை அனுப்புமாறு உயர்நீதிமன்றம் மனுதாரர் தரப்பிற்கு கட்டளையிட்டது.

# இராணுவ நடவடிக்கை சட்ட விரோதமானது - சீனா



பெய்ஜிங்கில் தனது ஈரானிய சகாவுடன் பேச்சுவார்த்தை நடத்தியபோது, ஈரானுக்கு எதிரான அமெரிக்க மற்றும் இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கையை “சட்டவிரோதமானது” என்று சீனாவின் வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார். மேலும், மத்திய கிழக்கு ஒரு “முடிவான திருப்புமுனையில்” இருப்பதாகவும், முழுமையான போர் நிறுத்தம் அவசியம் என்றும் கூறினார். ஈரானின் வெளியுறவு அமைச்சர் அராக்சி, பெய்ஜிங்கின் “உறுதியான நிலைப்பாட்டிற்கு” நன்றி தெரிவித்ததோடு, இரு நாடுகளும் முன்னெப்போதையும் விட நெருக்கமாக வளரும் என்றும் கூறினார்.

ஈரானின் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி, பெய்ஜிங்கில் சீனாவின் வெளியுறவு அமைச்சர் வாங் யீயை சந்தித்தார். அமெரிக்காவுடனான உறவில் விரிசல் ஏற்பட்ட பிறகு அவர் சீனாவுக்கு மேற்கொள்ளும் முதல் பயணம் இதுவாகும். மேலும், ட்றம்பின் திட்டமிடப்பட்ட பயணத்திற்கு ஒரு வாரத்திற்கு சற்று முன்னதாகவே இந்தப் பயணம் நடைபெற்றுள்ளது.

அதேசமயம், அமெரிக்கத் தடைகள் இருந்த போதிலும், ஈரான் மற்றும் ரஷ்யாவின் ட்ரோன் திட்டங்களுக்கு சீனா தொடர்ந்து உதிரிபாகங்களை வழங்கி வருகிறதுஎனவால் ஸ்ட்ரீட் ஜர்னல் தெரிவித்துள்ளது. சீன நிறுவனங்கள், ட்ரோன்களுக்கான என்ஜின்கள், பேட்டரிகள், ஃபைபர் ஆப்டிக்

தொடர்ச்சி: பக்கம் 14

## இஸ்ரேலின் அணுவாயுதம் தொடர்பான தகவல்களை வெளியிட கோரிக்கை



அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் உள்ள 30 ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் அடங்கிய குழு, இஸ்ரேலின் அணு ஆயுதக் கிடங்கு மற்றும் அது தொடர்பான கொள்கைகள் குறித்த தகவல்களை அதிபர் டொனால்ட் ட்றம்ப் நிர்வாகம் வெளியிட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளது. இந்த வெளிப்படைத்தன்மை இல்லாதது முழு மத்திய கிழக்கையும் அச்சுறுத்துகிறது என்று அந்த சட்டமியற்றுபவர்கள் வாதிடுகின்றனர்.

இஸ்ரேல் தன்னிடம் அணு ஆயுதங்கள் இருப்பதை உறுதிப்படுத்தவோ அல்லது மறுக்கவோ இல்லை; மேலும், அவற்றின் சாத்தியமான பயன்பாடு அல்லது அதன் சிவப்பு கோடுகளை கோடிட்டுக் காட்டும் ஒரு கோட்பாட்டையும் அது பகிரங்கமாக முன் வைக்கவில்லை. குறைந்தது 1960களின் முற்பகுதியிலிருந்தே இஸ்ரேலின் அணு ஆயுதத் திட்டம் குறித்து அறிந்திருந்த அமெரிக்கா, இந்த விவகாரத்தில் மௌனம் காத்து வருகிறது.

“அமெரிக்க அரசாங்கம் அதிகாரப்பூர்வமாக ஒப்புக்கொள்ள மறுக்கும் ஒரு நாட்டின் சாத்தியமான அணு ஆயுதத் திட்டத்துடன் வாஷிங்டன் தோளோடு தோள் நின்று போராடுகிறது,” என்று ஜனநாயகக் கட்சி பிரதிநிதி ஜோவாகின் காஸ்ட்ரோ தலைமையிலான காங்கிரஸ் உறுப்பினர்கள், வெளியுறவுத்துறை அமைச்சர் மார்கோ ரூபியோவுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்தனர்.

“இந்தச் சூழலில் தவறான கணிப்பு, பதற்றம் அதிகரித்தல் மற்றும் அணு ஆயுதப் பயன்பாடு ஆகியவற்றின் அபாயங்கள் வெறும் கோட்பாட்டு ரீதியானவை அல்ல,” என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மற்ற நாடுகளைப் போலவே இஸ்ரேலையும் அதே அளவிலான வெளிப்படைத்தன்மைக்கு

தொடர்ச்சி: பக்கம் 14

## ஐக்கிய அரபு அமீரகம் ஏன் ஒபெக் அமைப்பிலிருந்து விலகியது?




கிட்டத்தட்ட 60 ஆண்டுகளுக்குப் பிறகு ஐக்கிய அரபு அமீரகம் ஏன் ஒபெக் அமைப்பிலிருந்து விலகியது என்பதை அமெரிக்காவிற்கான ஐக்கிய அரபு அமீரகத்தின் தூதர் கடந்த புதன்கிழமை(6) விளக்கினார். சுருக்கமாகச் சொன்னால்: ஐக்கிய அரபு அமீரகம் அந்த அமைப்பைக் கடந்து வளர்ந்து விட்டது. தற்போது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கால் பங்கிற்கும் குறைவாகவே எரிசக்தித் துறை உள்ளது. செயற்கை நுண்ணறிவு, விமானப் போக்குவரத்து, தளபாடங்கள், சுற்றுலா மற்றும் உயிர் அறிவியல் ஆகியவை வேகமாக வளர்ந்து வரும் துறைகளாகும்.

அவர்கள் 4 ஆண்டுகளில் 35 வர்த்தக ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளனர் மற்றும் அமெரிக்காவுடன் 1.4 டிரில்லியன் டாலர் முதலீட்டுக் கூட்டாண்மைக்கு உறுதி யளித்துள்ளனர். இது ஒரு கூட்டமைப்பிற்குள் எண்ணெய் விநியோகத்தை நிர்வகிப்பதில்

தொடர்ச்சி: பக்கம் 14

## பாதிக்கப்பட்ட வணிகங்களுக்கு இந்தியா கடன் உத்தரவாதத் திட்டம்



மத்திய கிழக்கு மோதலால் பாதிக்கப்பட்ட வணிகங்களுக்கு ஆதரவளிக்கும் வகையில், இந்தியா கடன் உத்தரவாதத் திட்டத்தை கடந்த புதன்கிழமை(6) அறிமுகப் படுத்தியுள்ளது.

மத்திய அரசு, 2 பில்லியன் டாலர் மூலதன ஒதுக்கீட்டுத் திட்டமான அவசரகால கடன் உத்தரவாதத் திட்டம் (ECLGS) 5.0-ஐ செவ்வாய்க் கிழமை அறிவித்தது. கோவிட்-19 பெருந்தொற்றால் பாதிக்கப்பட்ட வணிகங்களுக்கு ஆதரவளிப்பதற்காக, ECLGS வசதி முதன்முதலில் மே 2020-இல் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்தத் திட்டம் கூடுதலாக 3.5 பில்லியன் டாலர் கடன் ஓட்டத்தை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பயணிகள் விமான நிறுவனங்களுக்கான கடன் வரம்பு 160 மில்லியன் டாலராக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி: பக்கம் 15

# இலங்கை வியட்நாம் இடையே 5 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

இலங்கை மற்றும் வியட்நாம் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 55 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதற்காக, ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க 2025ஆம் ஆண்டு வியட்நாமிற்கு மேற்கொண்ட அரச பயணத்தைத் தொடர்ந்து, இலங்கை ஜனாதிபதியின் அழைப்பையேற்று வியட்நாம் ஜனாதிபதி இலங்கைக்கு வருகை தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



இந்த நிலையில், வியட்நாம் மற்றும் இலங்கை இடையே பல்வேறு துறைகள் சார்ந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பரிமாறிக் கொள்ளும் நிகழ்வு, இலங்கை ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மற்றும் வியட்நாம் சோசலிசக் குடியரசின் ஜனாதிபதியும் வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவின் பொதுச் செயலாளருமான டோ லாம் ஆகியோர் முன்னிலையில் வெள்ளிக்கிழமை (8) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

**அதன்படி,**

• பொலிஸ் பயிற்சி மற்றும் விஞ்ஞான ஆராய்ச்சித் துறையில் ஒத்துழைப்புக்காக, வியட்நாமின் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் மக்கள் பொலிஸ் அகடமி மற்றும் இலங்கை தேசிய பொலிஸ் அகடமி ஆகியவற்றுக்கு இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம், வியட்நாம் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் லுவோங் டேம் குவாங் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால ஆகியோரால் பரிமாறிக்கொள்ளப்பட்டது.

• விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் ஒத்துழைப்புக்காக, இலங்கை விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சுக்கும் வியட்நாம் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம், வியட்நாமின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் வூ ஹாய் குவான் மற்றும் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் கிரிஷாந்த அபேசேன ஆகியோரினால் பரிமாறிக்கொள்ளப்பட்டது.

• வியட்நாமின் இன மற்றும் மத விவகாரங்கள் அமைச்சு மற்றும் இலங்கையின் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு ஆகியவற்றுக்கு இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தமானது, வியட்நாமிய இன மற்றும் மத விவகாரங்கள் அமைச்சர் நுயென் டின் காங் மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி ஆகியோரால் பரிமாறிக்கொள்ளப்பட்டது.

• வியட்நாமின் கலாசாரம், விளையாட்டு மற்றும் சுற்றுலா அமைச்சு மற்றும் இலங்கையின் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு ஆகியவற்றிற்கிடையிலான கலாசார ஒத்துழைப்பு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம், வியட்நாமின் கலாசாரம், விளையாட்டு மற்றும் சுற்றுலா பிரதி அமைச்சர் ஹோ அன் பொங் மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி ஆகியோரால் பரிமாறிக் கொள்ளப்பட்டது.

வியட்நாமின் கலாசார, விளையாட்டு மற்றும் சுற்றுலா அமைச்சுக்கும், இலங்கையின் சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சுக்கும் இடையில் தகவல் மற்றும் தொடர்பாடல் துறையில் ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், வியட்நாமின் கலாசார, விளையாட்டு மற்றும் சுற்றுலா பிரதி அமைச்சர் ஹோ அன் பொங் மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர் கலாநிதி கௌசல்யா ஆரியரத்ன ஆகியோரால் பரிமாறிக்கொள்ளப்பட்டது.

• வியட்நாம் அரசாங்கத்தினால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட 100 மெட்ரிக் தொன் உரத் தொகுதி, வியட்நாம் நிதி அமைச்சர் என்கோ வென் டுவான் மற்றும் வியட்நாம் தேசிய இரசாயன குழுவின் பிரதம பணிப்பாளர் நுயென் ஹூ டு ஆகியோரால் விவசாய அமைச்சின் செயலாளர் டி. பி. விக்ரமசிங்கவி டம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

## ஆசிரியர் தலையங்கம் | 09 மே, 2026

# மே மாதம் ஈழத்தமிழரின் இறைமையை ஒருமைப்பாட்டை மீளுறுதிப்படுத்தும் மாதமாக அமைக்கப்படல் வேண்டும்.

இன்றைக்கு 80 ஆண்டுகளுக்கு முன்பு 17.05. 1946 இல் பிரித்தானியக் காலனித்துவ அரசாங்கம் தனது அரசமன்றக் கட்டளையாக (Order in Council promulgating new Constitution) சிலோனுக்கான புதிய அரசியலமைப்பை பிரகடனப்படுத்தியது. இதன் தொடர்ச்சியாக 18.07.1946 இல் 1931ம் ஆண்டு முதலாக நடைமுறையில் இருந்த டொனமூர் அரசியலமைப்பின் 16வது வரவுசெலவுத் திட்டத்தை கடைசி வரவு செலவுத்திட்டமாக டி. எஸ் சேனநாயக்கா சிலோன் சட்டவாக்கச் சபையில் சமர்ப்பித்தார்.

இதனால் இவ்வாண்டு ஈழத்தமிழரின் இறைமையை பிரித்தானியக் காலனித்துவ அரசாங்கம் 1833இல் தான் தனது சந்தை மற்றும் இராணுவ நலனுக்காக ஈழத்தமிழர்களின் விருப்பின்றி சிங்களவர்களின் இறைமையுடன் இணைத்துச் செயற்கையாக உருவாக்கிய சிலோன் தேசியத்தின் அரசாங்கமாகத் தான் நிறுவிய சிலோன் அரசாங்கத்துள் கட்டமைத்தது. அன்று முதல் இன்று வரை ஈழத்தமிழர்கள் தங்களின் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலான இலங்கைத் தீவில் தொடருகின்ற தங்களின் இறைமையையும் தங்களின் தேசியத்தின் ஒருமைப்பாட்டையும் மீள் உற்பத்தி செய்யும் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இது பிரிவினையுமல்ல. இதற்கான அணுகுமுறை பயங்கரவாதமும் அல்ல.

இந்த உண்மையை உலக மக்களுக்கும் அனைத்துலக நாடுகளுக்கும் அனைத்துலக நிறுவனங்களுக்கும் வெளிப்படுத்தும் மாதமாக மே மாதத்தை வெளிப்படுத்தும் பொறுப்பு தாயகத்தில் வாழும் ஈழத்தமிழர்களுக்கும் உலகெங்கும் புலம் பதிந்து உலக இனமாகவுள்ள ஈழத்தமிழர்களுக்கும் உண்டு என்பதை இலக்கு முதலில் வலியுறுத்திக் கூறவிரும்புகிறது. அதுவும் பிரித்தானியாவில் பாராளுமன்ற உறுப்பினர்களை அமைச்சர்களைச் சந்திப்பவர்கள் பிரித்தானியாவால் ஏற்படுத்தப்பட்ட ஈழத்தமிழரின் அவலவாழ்வை மாற்றும் தார்மீகப் பொறுப்பு பிரித்தானிய அரசுக்கு உண்டு என்பதை தெளிவாக்க வேண்டுமென்பது இலக்கின் கருத்தாகவுள்ளது.

மேலும் 13.11. 1947 இல் பிரித்தானிய வெஸ்ட் மினிஸ்டர் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்யப்பட்ட சோல்பரி அரசியலமைப்பின் அடிப்படையிலான சிலோன் சுதந்திர மசோதா நிறைவேற்றப்பட்டு 10.12. 1947 இல் பிரித்தானியாவின் அரச கையெழுத்தைப் பெற்றமை வரலாறு. இதன் வழி 04.02.1948இல் சிலோன் சுதந்திரமான நாடாக பிரித்தானிய காலனித்துவ அரசிலிருந்து விடுபட்டது. ஆனால் சோல்பரி அரசியலமைப்பின் கீழ் ஈழத்தமிழர்களால் தங்களது அரசியல் உரிமைகளை மீளப்பெறுவதற்கு 22.05. 1972 வரை 24 ஆண்டுகள் எடுத்த அனைத்து சனநாயக வழிப் போராட்டங்களையும் இனஅழிப்பு இனத்துடைப்பு பண்பாட்டு இனஅழிப்பு அரசியல் மூலம் தொடர்ந்து வந்த சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்ற முறைமையிலான சிங்கள அரசாங்கங்கள் அழித்தன என்பது வரலாறு.

அத்துடன் 1969ம் ஆண்டு சோல்பரி அரசியலமைப்பின் கீழ் 1956ம் ஆண்டுச் சிங்களம் மட்டும் சட்டத்துக்கு எதிராகச் செய்யப்பட்ட கோடீஸ்வரன் வழக்கில் பிரித்தானிய பிரிவிக்கவுன்சில் அளித்த தீர்ப்பான சிங்களம் மட்டும் சட்டத்தை மீளப்பெற்று கோடீஸ்வரனுக்கு அவரைப் பதவி நீக்கம் செய்த காலத்துக்கான சம்பளத்தை நட்ட ஈடாகக் கொடுத்து சோல்பரி அரசியலமைப்புக்கு அமைய மீளவும் சிங்களம் மட்டும் சட்டத்தை சிறுபான்மை மதங்களுக்கோ அல்லது சிறுபான்மை இனங்களுக்கோ பாதிப்பு ஏற்படாதவகையில் மீளவும் சிலோன் பாராளுமன்றத்தில் மீளவும் கொண்டு வரவேண்டும் என்ற தீர்ப்பு வழங்கப்பட்டமை வரலாறாக உள்ளது.

இந்த பிரிவிக்கவுன்சில் தீர்ப்பை ஏற்க மறுத்து மாட்சிமைக்குரிய 2வது எலிசபேத் மகாராணியவர்கள் சிலோன் அரசாங்கத்தின் தலைவி என்ற நிலையை நிராகரிக்கும் வகையில் 22.05. 1972இல் சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான சிறிலங்காச் சுதந்திரக்கட்சி இடதுசாரிகள் கூட்டணி ஆட்சியாளர்கள் சோல்பரி அரசியலமைப்பை வன்முறைப்படுத்தி தேர்ந்தெடுக்கப்பட்ட ஈழத்தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினரின் பங்களிப்பை மறுத்து தன்னிச்சையாக பாராளுமன்றக் கட்டிடத்திற்கு வெளியே நவரங்கலா மண்டபத்தில் சிங்கள பௌத்த சிறிலங்கா சோசலிச குடியரசை பிரகடனப்படுத்தி ஈழத்தமிழர்களை 22.05. 1972 இல் அரசற்ற தேசஇனமாக (Nation without State) மாற்றினர்.

இதனால் மே மாதத்து 22ம் நாள் ஈழத்தமிழர்கள் தங்களிடம் பிரித்தானிய காலனித்துவத்திடம் இருந்து இயல்பாகவே மீண்டுவிட்ட தங்களின் யாழ்ப்பாண வன்னி அரசுக்களின் நிலப்பரப்பு மீதான தங்களின் இறைமையின் அடிப்படையில் தங்களுக்கான பாதுகாப்பான அமைதியான வாழ்வையும் வளர்ச்சிகளையும் மீள் உற்பத்தி செய்து கொடுத்து 54 ஆண்டுகளாகத் தொடர்ந்து சனநாயக ரீதியாக இன்று வரை தங்களுக்கான தேசிய விடுதலைப் போராட்டத்தின் வழி முன்னெடுத்து வருகின்றனர். இதனை சிறிலங்கா அரசாங்கம் அரச பயங்கரவாதத்துடன் கூடிய இனஅழிப்பு மூலம் 1956 முதல் தடுத்து 1972 முதல் ஈழத்தமிழர்களின் உயிருக்கும் உடைமைகளுக்கும் நாளாந்த வாழ்வுக்கும் நாளாந்தம் இனங்காணக்கூடிய அச்சத்தை ஏற்படுத்தி வந்ததால் ஈழத்தமிழர்கள் தங்களின் உயிரையும் உடமைகளையும் நாளாந்த வாழ்வையும் பாதுகாக்க தங்களுக்கான நடைமுறையரசை (Defacto Government) 1978 இல் கட்டமைத்தனர்.

1975ம் ஆண்டு அடையாளக் குடியொப்பம் 1975ம் ஆண்டு சிறிலங்காவின் தேசிய சபையில் தன்னாட்சிப் பிரகடனம் 1976ம் ஆண்டின் வட்டுக்கோட்டைத் தீர்மானம், 1977ம் ஆண்டின் தமிழர் தாயகக் குடியொப்பம் வழியாக அனைத்துலகச் சட்டங்களுக்கு அமைய ஈழத்தமிழர்கள் தங்களின் தன்னாட்சிக்கான அனைத்துலகச் சட்டத் தகுதியைப் பெற்றனர். இதன் அடிப்படையில் 1978 முதல் 2009 வரை தங்களின் உள்ளகத் தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் சீருடை அணிந்த முப்படைகளுடனும் சட்டவாக்க நிர்வாக சட்ட அமுலாக்கத் தன்மைகளுடனும் தங்களுக்கான அரசைத் தங்களின் நாளாந்த பாதுகாப்புக்காக நடைமுறைப்படுத்தினர்.

அதே நேரத்தில் தங்களின் வெளியக தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் அனைத்துலக நாடுகளின் ஏற்புடைமைக்காக உழைத்து வந்த நேரத்தில் இதே மே மாதம் 18ம் நாள் 2009ம் ஆண்டு சிறிலங்காவால் ஈழத்தமிழர்கள் தேசமாகவே 146000 ஈழத்தமிழர்கள் இனப்படுகொலை நிகழ்த்தப்பட்டமை வரலாறு. அனைத்துலக சட்டங்களுக்கு எதிரான ஈழத்தமிழ் மக்கள் மேலான சிறிலங்காவின் இனஅழிப்பாலும் ஈழத்தமிழர்களின் தாயக உட்கட்டுமான அழிப்பாலும் மீளவும் சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்றக் கொடுங்கோன்மை ஆட்சியை படைபலத்தால் சிறிலங்கா 2009 இல் நிறுவியது. இன்று வரை 17 ஆண்டுகள் ஈழத்தமிழர்களின் அரசியல் பணிவையும் ஈழத்தமிழர்களின் தாயகத்தின் நிர்வாகத்தையும் படைபலத்தால் நடாத்தும் ஆக்கிரமிப்பு அரசாக சிறிலங்கா தொடர்கிறது. அதேவேளை 2009 முதல் இன்று வரை சனநாயக வழிகளில் மீளவும் தங்களின் தாயக விடுதலைக்காகத் தேசிய நீக்கத்திற்கு எதிராக இறைமை ஒடுக்கத்துக்கு எதிராக ஈழத்தமிழர்கள் தாயகத்தில் தொடர்ந்து வலிசுமந்த நெஞ்சினராய்த் தொடர்ந்து போராடி வருகின்றனர்.

எனவே மே மாதம் ஈழத்தமிழர்களின் உண்மை வரலாற்றை வெளிப்படுத்தி ஈழத்தமிழரின் இறைமையை ஒருமைப்பாட்டை மீளுறுதிப்படுத்தும் மாதமாக வலிகள் தரும் உணர்ச்சிகளைத் தாண்டி சனநாயக வழிகளில் முன்னெடுத்து அனைத்துல மக்கள் மயப்படுத்தி மீளவும் தங்களின் தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் ஈழத்தமிழர்கள் பாதுகாப்பான அமைதி வாழ்வையும் வளர்ச்சிகளையும் பெற தாயகத்திலும் அனைத்துலகிலும் ஈழத்தமிழர்கள் தங்களின் தாயகக் கடமையை முன்னெடுக்க வேண்டுமென்பதை இலக்கு இவ்வாரத்தில் வலியுறுத்த விரும்புகிறது.


மேலும் மயிலிட்டியில் அனைத்துலகத் தொழிலாளர் நாளன்று மக்கள் போராட்டம் தாங்கள் வாழ்வதற்கு 36 ஆண்டுகளாக விடுவிக்கப்படாதுள்ள தங்கள் காணிகளை மீளத் தருமாறு கடந்த வாரத்தில் நடைபெற்றுள்ளது. சிறிலங்காவின் மகிந்தராஜபக்ச அரசாங்கம் 2013ம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தல் மூலம் அரசகாணியாகக் கைப்பற்றிய 6000 ஏக்கர் நிலத்தில் 2015ம் ஆண்டு சிறிசேனா அரசாங்கம் 3000 ஏக்கர் சொந்தக் காணிகளில் மக்கள் மீளவும் சென்று வாழலாமென அறிவித்தது. இதில் கமண்டோ பங்களாவொன்றைக் கட்டுவதற்காக கைப்பற்றிய 200 குடும்பங்களின் காணிகளும் அடங்கும்.

ஆயினும் இந்த மக்களுக்கான சட்டபூர்வ உரிமையை பெறாதவாறு வர்த்தமானி விடுத்த அறிவித்தல் இன்று வரை விலத்தப்படாது தொடர்வதால் மக்களால் எதுவும் செய்ய இயலாதுள்ளது. இன்றைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் 28.03. 2025ம் ஆண்டு வெள்ளிக்கிழமை வெளியிட்ட 2430ம் இலக்க வர்த்தமானி மூலம் வடக்கில் உள்ள நான்கு மாவட்டங்களின் கடலோரக்காணிகளில் 6000 ஏக்கரை அரசவுடமையாக்கியது. இந்த மக்களின் போராட்டம் நூற்றுக்கு நூறு வீதம் நியாயமானதென தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எழுப்பியுள்ள குரலை அனைத்துலகிலும் ஈழத்தமிழர்கள் உலக மக்கள் மயப்படுத்த வேண்டுமென்பது இலக்கின் கருத்தாக உள்ளது.

அத்துடன் தமிழர் என்னும் ஒருமைப்பாட்டில் தமிழர் தடுமாறுவதால் மக்கள் இறைமைக்கு பாதிப்பு ஏற்படுவது ஈழத்தில் மட்டுமல்ல தமிழகத்திலும் நாளாந்த வாழ்வதைத் தமிழக வெற்றிக்கழகத்தினை ஆட்சியமைக்க தமிழக மக்கள் ஆணை வழங்கிய நிலையில் அவரை ஆட்சியமைக்கவிடாது அங்கு நடைபெறுகின்ற நிகழ்வுகள் உலகிற்கு எடுத்துரைக்கின்றன. அதே வேளை தமிழ் மக்கள் தேசிய முன்னணித் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் தமிழ்நாட்டு மக்கள் ஈழத்தமிழர்களுக்கு பலமாக இருந்த வரலாற்றைச் சுட்டிக்காட்டி யோசப் விஜய் அவர்களும் அத்தகைய விதத்தில் பலத்தினை அளிக்க வேண்டுமெனத் தனது வாழ்த்துச் செய்தியில் சுட்டிக்காட்டியுள்ளதை இலக்கும் யோசப் விஜய் அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்து மீள்சுட்டிக்காட்ட விரும்புகிறது.

வியட்னாம் அரசத்தலைவரின் இலங்கை வருகை சீனாவுக்கான ஈரான் வெளிவிவகார அமைச்சரின் பயணம் தொடரப் போகும் அமெரிக்க அரசத்தலைவர் டொனால்ட் ட்ரம்பின் சீனப்பயணம் என்பன தெற்காசியாவை மையப்படுத்தி உலக அரசியல் நகர்வுகள் இடம்பெறுவதைத் தெளிவாக்குகின்றன. இத்தகைய காலகட்டத்தில் ஈழத் தமிழர்கள் தங்களின் உலகளாவிய அறிவுச்சமுதாயத்தை எதிர்வினைகள் செய்வதற்கான கட்டமைப்பாக மாற்ற வேண்டும் என்பதையும் இலக்கு இவ்வாரத்தில் வலியுறுத்திக் கூறவிரும்புகிறது.

**ஆசிரியர்**



# 2.5மில்லியன் டொலர்கள் மோசடி: திறைசேரியை சூழ்ந்து நிற்கும் மர்ம மேகங்கள்

**விதுரன்**

இலங்கையின் நிதி நிர்வாக வரலாற்றில் மற்றுமொரு கரும்புள்ளியாக, திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திலிருந்து (ERD) அவுஸ்திரேலியாவிற்குச் செலுத்தப்பட வேண்டிய 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி, சூட்சுமமான முறையில் மூன்றாம் தரப்பு கணக்கிற்குத் திசைதிருப்பப்பட்ட விவகாரம் விஸ்வரூபம் எடுத்துள்ளது.




இது வெறுமனே தொழில்நுட்பக் கோளாறு அல்லது ‘ஹக்கிங்’ என்பதற்கு அப்பால், நாட்டின் நிதி இறையாண்மை மற்றும் நிர்வாகக் கட்டமைப்பில் நிலவும் பாரிய ஓட்டைகளையும், அதிகார மட்டத்திலான பொறுப்பற்ற தன்மையையும் அம்பலப்படுத்தியுள்ளது.

இந்த மோசடியின் பின்னணியில் உள்ள தொழில்நுட்பக் கையாடல் மிகவும் அதிர்ச்சியளிக்கக் கூடியதாகும். 2026 ஜனவரியில் அவுஸ்திரேலியக் கடன் தவணையைச் செலுத்தும் போது, மின்னஞ்சல் ஊடாக வந்த போலி வங்கி விபரங்களை அடிப்படையாகக் கொண்டே இந்த நிதி பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பொதுவாக, ஒரு சர்வதேசக் கடன் தவணையைச் செலுத்தும் போது, 13 உயர்மட்ட அதிகாரிகள் அந்த ஆவணங்களைச் சரிபார்த்து கையெழுத்திட வேண்டும் என்ற விதிமுறை இலங்கையில் பின்பற்றப்பட்டு வரும் மரபு ரீதியான முறைமையாக இருக்கின்றது.

ஆனால் அத்தனை அதிகாரிகளின் கைகளைக் கடந்து செல்லும் ஆவணத்தில், வங்கிக் கணக்கு இலக்கம் மாற்றப்பட்டிருப்பதை ஒருவர்கூடக் கண்டறியவில்லை என்பது நம்பகத்தன்மையற்றது.

அதுமட்டுமன்றி, மின்னஞ்சல் மூலம் வந்த புதிய கணக்கு விபரங்களை உறுதிப்படுத்த, அதிகாரிகள் உண்மையான கடன் ஒப்பந்தத்தில் உள்ள தொலைபேசி எண்களைப் பயன்படுத்தாமல், மோசடிக்காரர்கள் மின்னஞ்சலில் வழங்கியிருந்த போலி எண்ணுக்கே அழைத்து உறுதிப்படுத்தியுள்ளமையும் வேடிக்கையானது.




இதுவொரு தற்செயலான பிழையா அல்லது உள்ளக அதிகாரிகள் யாராவது திட்டமிட்டு இந்த மோசடிக்குத் துணை போயுள்ளனரா என்ற சந்தேகத்தை இப்போது வலுவடையச் செய்துள்ளது. ஒரு சர்வதேச கொடுக்கல் வாங்கலில், ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட வங்கிக் கணக்குகளைத் தவிர்த்து புதிய கணக்குகளுக்குப் பணத்தை அனுப்பும் போது பின்பற்ற வேண்டிய அடிப்படை ‘சரிபார்ப்பு’ (Verification) நடைமுறைகள் காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளன.

இவ்வாறான சம்பவங்கள் உலக நாடுகளில் நடைபெறாமல் இல்லை.. 2016 ஆம் ஆண்டு பங்களாதேஷ் மத்திய வங்கியில் 81 மில்லியன் டொலர் கொள்ளை நடைபெற்றுள்ளது. அங்கேயும் வடகொரியாவின் ‘லாசரஸ்’ (Lazarus) போன்ற நுணுக்கமான ஹக்கிங் குழுக்கள் ஊடுருவி கொள்ளையை கன கச்சிதமாக நிகழ்த்தியிருந்தன. ஆனால், அங்குள்ள அதிகாரிகள் தவறை உணர்ந்தவுடன் உலகளாவிய ரீதியில் எச்சரிக்கையும் விடுத்தனர்.

திறைசேரி செயலாளர் ஹர்ஷன சூரியப்பெருமாவின் கூற்றுப்படி, ஜனவரியிலேயே இந்தியாவிற்கான கடன் கொடுப்பனவின் போதும் இத்தகைய மோசடி முயற்சி நடந்துள்ளமை உறுதிப்படுத்தப்படுகின்றது.

இந்தியக் கடன் கொடுப்பனவில் அச்சுறுத்தலை உணர்ந்த நிதி நிர்வாகம், ஏனைய அனைத்து வெளிநாட்டுப் பரிமாற்றங்களையும் உடனடியாகச் சரிபார்த்திருக்க வேண்டும். ஆனால், அவுஸ்திரேலியாவிற்குப் பணம் சென்றடையவில்லை என்ற தகவல் ஏப்ரல் மாதம் மீளவும் தெரிவிக்கப்படும் வரை திறைசேரி மௌனம் காத்தமை, அவர்களின் கண்காணிப்பு முறையில் உள்ள பாரிய பலவீனத்தைக் வெளிப்படுத்தியுள்ளது.



இதுவொரு தனிமைப்படுத்தப்பட்ட சம்பவம் (Isolated Incident) அல்ல, மாறாக இதுவொரு தொடர் முயற்சியின் வெற்றிகரமான தாக்குதல் (Persistent Threat) என்பதை இன்னமும் அதிகாரிகள் ஏற்றுக்கொள்வதற்கு தயாராக இல்லையென்பது துரதிஷ்டவசமானதாகும்.

இந்நிலையில், வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் ரங்க ராஜபக்ஷவின் மரணம் விசாரணைகளின் தீவிரத்தை கட்டுப்படுத்தும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. மோசடி தொடர்பாகப் பணியிடை நீக்கம் செய்யப்பட்ட ஐந்து அதிகாரிகளில் ஒருவரான இவர், தனது வீட்டின் தோட்டத்தில் மர்மமான முறையில் உயிரிழந்திருந்தார்.

பிரேதப் பரிசோதனையில் அவரது மரணம் தற்கொலை எனத் தீர்மானிக்கப்பட்டாலும், பாரிய நிதி மோசடி விசாரணை நடந்து கொண்டிருக்கும் போது, அதனுடன் தொடர்புடைய முக்கிய அதிகாரி இவ்வாறு உயிரிழப்பது பலத்த சந்தேகங்களை ஏற்படுத்துகிறது.

அவர் மீதான நிர்வாக அழுத்தங்கள் காரணமாக இது நடந்ததா அல்லது அவர் ஏதாவது உண்மைகளை வெளிப்படுத்தத் தயாராக இருந்தாரா? அதற்காகவே அவரது மரணம் உண்மைகளை மூடிமறைப்பதற்கான ஒரு வழியாகப் பயன்படுத்தப்படுகிறதா என்று பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது.

குறிப்பாக, குற்றப்புலனாய்வுத் திணைக்களம் அவரிடம் பலமுறை வாக்குமூலங்களைப் பெற்று, அவரது டிஜிட்டல் சாதனங்களைக் கையேற்ற நிலையில் இச்சம்பவம் நடந்துள்ளது. இத்தகைய மரணங்கள் உண்மையான குற்றவாளிகளைக் காப்பாற்றுவதற்கான ‘தியாகமாக’ அமைந்து விடக் கூடாது என்பதில் மிக முக்கிய கவனம் தேவையாக உள்ளது.

இலங்கைச் சட்டத்தின்படி, தற்கொலைக்குத் தூண்டுதல் (Abetment of Suicide) என்பது நிரூபிக்கப்பட வேண்டிய கடினமான விடயமாகும். இந்த அதிகாரி தற்கொலை செய்துகொண்டார் எனில், விசாரணை என்ற பெயரில் அவர் மீது பிரயோகிக்கப்பட்ட உளவியல் அழுத்தங்கள் எத்தகையவை என்பது ஆராயப்பட வேண்டும்.

ஒரு அதிகாரி தவறு செய்திருப்பின் அவருக்கு சட்டப்படியான தண்டனை வழங்கப்பட வேண்டுமே தவிர, அவர் உயிரிழக்கும் நிலைக்குத் தள்ளப்படுவது முறையான நீதியல்ல என்பது இயற்கை நியதியாகும்.

மறுபுறம், நிதி மோசடி தொடர்பான சட்டங்களில், தொழில்நுட்பக் குற்றங்களுக்கான தண்டனைகள் மற்றும் இழப்பீடுகளை அறவிடும் முறைகள் இலங்கையில் இன்னமும் வலுவற்றதாகவே உள்ளன. அமைச்சர் ருவன் ரணசிங்க கூறியது போல, இழக்கப்பட்ட நிதியை அதிகாரிகளிடமிருந்து வசூலிப்போம் என்பது எந்தளவுக்குச் சாத்தியம்? ஒரு சாதாரண அரச அதிகாரியின் சொத்துக்கள் 2.5 மில்லியன் டொலர் இழப்பை ஈடு செய்யப் போதுமானதா? என்று பார்க்கையில் அவரது கூற்று அரசைக் காப்பாற்றுவதற்கான வெறும் அரசியல் கோசமாகும்.

அந்த வகையில், திறைசேரி மற்றும் இலங்கை மத்திய வங்கி ஆகிய இரு பிரதான நிதி நிறுவனங்களுக்கு இடையே நிலவும் அதிகாரப் போட்டி மற்றும் பொறுப்பைத் தட்டிக்கழிக்கும் போக்குகள் இந்த மோசடிக்கான பொறுப்புக் கூறலை மேலும் சிக்கலாக்கியுள்ளன.

2026 ஜனவரியில் புதிய அரச கடன் முகாமைத்துவச்



சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்னர், வெளிநாட்டு கடன் செலுத்தல்கள் அனைத்தும் இலங்கை மத்திய வங்கியின் கீழேயே இருந்தன. அவுஸ்திரேலிய நிறுவனத்திற்கான கடன் தவணைகள் 2025 செப்டம்பர் முதல் டிசம்பர் வரையான காலப்பகுதியில் செலுத்தப்பட்டவை எனில், அந்த மோசடிக்கு இலங்கை மத்திய வங்கியே முழுமையாகப் பொறுப்புக் கூற வேண்டும்.

ஆனால், தற்போது திறைசேரி அதிகாரிகள் மட்டும்


தொடர்ச்சி: பக்கம் 15

# இனப்படுகொலை நாட்களில் பெரும்பசி, பெருந்தாகம் தீர்த்த முள்ளிவாய்க்கால் ‘கஞ்சி’




தீபச்செல்வன்

முள்ளிவாய்க்கால் ஈழத் தமிழினத்தின் இதயங்களில் இருந்து நீங்க மறுக்கும் பெருவடுவாய் தங்கிவிட்ட இனப்படுகொலையின் பெருங்காயம். எங்கள் வரலாற்றில் மே மாதம் என்பது கனத்த நினைவுகளால் ஆனதொரு காலம். நம் பண்பாட்டில் உள்ள நினைவுநாட்கள் போலன்றி ஒரு இனத்தின் கூட்டுத் துயரத்தின் பெருநாளாகிறது. உண்மையில் இந் நாட்கள் இன அழிவின் விளிம்பில் நின்று உயிர் தப்பிய மக்களின் அனுபவங்களையும், உயிரிழந்த லட்சம் மக்களின் துயரத்தையும் மீண்டும் மீண்டும் மனங்களில் பரப்புகின்றன. முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையில் ஈழ இனத்தின் குருதியைப் போல நம் நினைவில் நிற்கிறது’முள்ளிவாய்க்கால் கஞ்சி’.



## பசியினால் இனப்படுகொலை

உலகில் பல்வேறு இனக்குழுக்களும் பல்வேறு ஒடுக்குமுறை வழிகளால் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள். உலகின் சில மக்கள் விச வாயு செலுத்தி இனப்படுகொலை செய்யப்பட்டார்கள். உலகின் சில மக்கள் வன்புணர்வு செய்யப்பட்டு இனப்படுகொலை செய்யப்பட்டார்கள். உலகின் சில மக்கள் சித்திரவதை செய்யப்பட்டு இனப்படுகொலை செய்யப்பட்டார்கள்.உலகின் சில மக்கள் பசியினால் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள். உலகின் சில மக்கள் தாகத்தினால் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள். ஈழத் தமிழ் மக்களோ இங்குள்ள எல்லா வகை ஒடுக்குமுறையினாலும் இனப்படுகொலை செய்யப்பட் டார்கள். உலகின் மிகக் கொடிய இனப்படுகொலை அர சான ஸ்ரீலங்கா அரசு அதைச் செய்தது. அதில் ஒன்று தான் உணவுப்பொருட்களுக்கு தடையை ஏற்படுத்தி முள்ளி வாய்க்கால் மண்ணில் நடந்த இனப்படுகொலை.

முள்ளிவாய்க்கால் கஞ்சி என்பது இனப்படுகொலைக் காலத்தின் சாட்சியம். அது பட்டினியால் திருகப்பட்ட உயிர்களின் மொழி. அது இனவழிப்புச் செய்யப்பட்டவர்களிடையே உயிர் பிழைப்பின் கடைசி அடையாளம். 2009ஆம் ஆண்டு முல்லைத்தீவு மண்ணில் இறுதி யுத்தத்தின் போது, முள்ளிவாய்க்கால் பகுதியில் சிக்கியிருந்த இலட்சக்கணக்கான பொதுமக்கள் உணவு, தண்ணீர், மருந்து ஆகிய அடிப்படை தேவைகளின்றி பெரும் துயரத்தில் தவித்தனர். பசியினால் இறந்தவர்களதும் துடித்தவர்களதும் காட்சி எம் மனக் கண்களில் இருந்து இன்னமும் மறையவில்லை.

## கண்ணீராலும் குருதியாலுமான கஞ்சி

அந் நாட்களில் முள்ளிவாய்க்காலில் கிடைத்த ஒரே உணவாக இருந்தது முள்ளிவாய்க்கால் கஞ்சி. அந்த கஞ்சி சமைக்கப்பட்ட விதமே ஒரு மாபெரும் துயரத்தை எடுத்துரைக்கும் வகையிலிருந்தது. கிடைத்த சிறிதளவு அரிசி, சில சமயங்களில் அரிசி கூட இல்லாமல் கிழங்கு, இலைகள் அல்லது கிடைத்த எதையாவது சேர்த்து தண்ணீரில் கொதிக்கவைத்து தயாரிக்கப்பட்டது முள்ளிவாய்க்கால் கஞ்சி. உப்பே இல்லாமலும் கஞ்சி காய்ச்சிய நாட்களும் இருந்தன. கண்ணீரும் குருதியும் கலந்த அந்த கஞ்சி சுவைக்காக குடிக்கப்பட்டது அல்ல. மாபெரும் இனவழிப்பில் உயிர் தப்பவே அருந்தப்பட்டது. கஞ்சியின் ஒரு துளி என்பது வெறும் உணவல்ல, அது ஒரு ஒரு நாளிலாவது உயிரைக் காக்க உதவிய பெரு நம்பிக்கை.



முள்ளிவாய்க்காலில் மக்கள் வரிசையில் நின்று அந்த கஞ்சியைப் பெற்றுக் கொண்டார்கள். சில நேரங்களில் ஒரு குடும்பத்துக்கு ஒரு கிண்ணம் கஞ்சி மாத்திரமே கிடைத்தது. அந்த ஒரு கிண்ணத்தைப் பலர் பகிர்ந்து கொண்டனர். தாய் தன் பசியை மறந்து குழந்தைக்கு அளித்தாள். முதியவர்கள் தங்கள் பங்கைக் கூட இளையவர்களுக்கு விட்டுக் கொடுத்தனர். இனப்படுகொலையின் பேரழிவுச் சூழலில் மானுட நேயம், பகிர்வு, தியாகம் ஆகியவை மிகத் தெளிவாக வெளிப்பட்டன. இப்படியாக ஈழத் தமிழினம் என்றும் மறந்துவிடாமல் ஒற்றுமையுடனும் நேயத்துடனும் பகிர்வுடனும் பயணிக்க வேண்டிய பாதையை முள்ளிவாய்க்கால் கஞ்சி நினைவூட்டிக் கொண்டே இருக்கிறது.

## தாகத்தை உணர்த்திய பானம்

இன்று “முள்ளிவாய்க்கால் கஞ்சி” நினைவு தின நிகழ்வுகளில் ஒரு சின்னமாக மாறியுள்ளது. உலகம் முழுவதும் வாழும் தமிழர்கள் இந்த கஞ்சியை சமைத்து பகிர்ந்து கொண்டு அந்த நாட்களை நினைவுகூருகின்றனர். இன்று முள்ளிவாய்க்கால் கஞ்சி என்பது ஈழத் தமிழ் மக்கள் சந்தித்த இனப்படுகொலையின் ஒரு அரசியல் அடையாளமாக, சமூக, மனித உரிமை நினைவூட்டலாக வெளிப்படுகிறது. இந்த கஞ்சி வழியாக அந்த காலத்தின் உண்மைகள் பேசப்படுகின்றன. மௌனமாக இதன் ஊடாக ஒரு இனத்தின் துயரத்தையும் வடுவையும் குரலையும் நாம் வெளிப்படுத்த இயலும்.

இப்படியாக முள்ளிவாய்க்கால் கஞ்சி ஒரு சின்னமாக மாறியிருப்பது அதன் பின்னணியில் உள்ள இனப்படுகொலை வரலாற்றின் காரணமாகவே ஆகும். அது என்றைக்கும் ஒரு இனத்தின் வாழ்வியல் போராட்டத்தை வெளிப்படுத்தி நிற்கிறது. “பசி” என்பது உடலின் ஒரு தேவைதான். ஆனால் முள்ளிவாய்க்காலில் அது ஈழ மக்களை இனப்படுகொலை செய்யும் ஒரு ஆயுதமாக மாறியது. உணவு மறுக்கப்பட்ட அல்லது தடைசேய்யப்பட்ட நிலைமை, மனிதாபிமான உதவிகள் தடைசெய்யப்பட்ட சூழல் ஆகியவை எங்கள் மக்களை கொன்றழிப்பதற்கே. அச் சூழலில் நாம் விடுதலையினதும் வாழ்வினதும் தாகத்தை முள்ளிவாய்க்கால் கஞ்சி தணிக்க முற்பட்ட துளியெனலாம். உண்மையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி இனப்படுகொலையில் கொல்லப்பட்டவர்களதும் எஞ்சியவர்களதும் கடைசித் தாகம்.


## ஒரு கிண்ணம் கஞ்சியில் லட்சம் கதைகள்

யாவும் நிர்மூலமாக்கப்பட்ட ஈழ மண்ணில் யாவும் துடைத்தெறியப்பட்ட ஈழ வரலாற்றில் முள்ளிவாய்க்கால் கஞ்சி என்பது இன்று தலைமுறைகளை இணைக்கும் ஒரு நினைவுச் சின்னமாகவும் முக்கியத்துவம் பெறுகிறது. அந்த காலத்தை நேரில் அனுபவிக்காத இளைஞர்கள் கூட, இந்த கஞ்சியை சுவைக்கும் போது அந்த வரலாற்றை உணரவும் அறியவும் ஆரம்பிக்கின்றனர். அது ஒரு வரலாற்றின் பாடமாகவும் மாறுகிறது. இனவழிப்புப் போரின் விளைவுகள் என்ன? மனித உயிரின் மதிப்பு என்ன? அமைதியின் அவசியம் என்ன? போன்ற விடையங்களை இன்றைய தலைமுறையினர் உணரத் தொடங்கும் பாதையை முள்ளிவாய்க்கால் கஞ்சி ஊட்டுகிறது.



அத்துடன் முள்ளிவாய்க்கால் கஞ்சி நினைவுகூரல் என்பது இனப்படுகொலை செய்தவர்கள்மீதான ஒரு எதிர்ப்பின் வடிவமாகவும் முன்னிற்கிறது. அத்துடன் மறைக்கப்பட்ட உண்மைகளை வெளிக்கொணரும் முயற்சியாகவும், நீதிக்கான கோரிக்கையாகவும் அமைகிறது. “முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை ஒருநாளும் மறக்க மாட்டோம்” என்ற உறுதியையும் முள்ளிவாய்க்கால் கஞ்சி தலைமுறைகளுக்கும் வரலாற்றுக்கும் பகிர்கிறது. இது ஒரு அமைதியான போராட்டமாக ஒரு இனத்தின் நினைவுகளையும் வரலாற்றையும் உயிர்ப்புடன் வைத்திருக்கும்

தொடர்ச்சி: பக்கம் 14



# அந்த ஒரு பிடி மண்!

ஓ நீ பற்றிப் பிடித்த மண்தான்
நம் வீரம் பறைசாற்றும்
சுதந்திரத் தாய்மண்ணோ!
நீ பற்றிப் பிடித்த இந்த
ஒரு பிடி மண்தான்
இன்னமும் எதிரியால்
விடுவிக்க முடியா எம்
விடுதலைத் தாய் மண்ணோ!

எதிரியின் காலடியில்
அடிமைப்பட்டது எம் தேசம் என
எதிரியே கங்கணம் கட்டமுடியாக்
காவியம் படைத்த வல்ல
மாவீரனாய்
நீ இங்கே உறங்கிக்
கிடக்கிறாய்....

ஒருபிடி மண்ணேனும் சுதந்திர
மண் இன்னமும் எம்மிடமுன்றென
நாமெல்லாம் உறுதிகொண்டு
நிமிர்வுகொள்ள, உன்
கைப்பிடிக்குள் பற்றிப் பிடித்த
அந்த மண் எம்
சுதந்திரத் தாய் மண்ணல்லவோ!

எத்துணை துயரிலும் கலங்காது
நின்ற உன் எண்ணமும், செயலும்
வான்கொண்ட உயரமன்றோ!
மண்ணிற் படைத்த வீரக்
கதைகளால்
எம்முள் வாழ்கின்ற நீ என்றும்
எம்
விடுதலைப் பண்ணல்லவோ!

நீ எம் மண்ணை விடுவித்து
விட்டாய்
நீ எம் மண்ணை மலர்வித்து
விட்டாய்,
நீ எம் மண்ணைச் சிறப்பித்து
விட்டாய்
நீ எம் மண்ணை முத்தமிட்டு
விட்டாய்!
அந்த ஒருபிடி மண்ணை
அள்ளியெடுத்து, ஆரத்தழுவி
கையிலெடுத்துக் கண்ணிலொற்றி,
மெய்சிலிர்க்க மேனியிற் தடவி
நானும் முத்தமிடும் நாள்
எந்நாளோ?

**காந்தள்**

# தந்தை செல்வா சாகும்போது கூறியதுதான் வட்டுக்கோட்டை தீர்மானம்.!



பா.அரியநேத்திரன்

அனேகமானவர்கள் தந்தை செல்வா சாகும்போது "தமிழர்களை கடவுள்தான் காப்பாற்றவேண்டும்"என கூறி கடவுளிடம் தமிழர்களை பாராம் கொடுத்துவிட்டே மரணித்தார் என்ற கருத்தை மக்கள் மத்தியில் பல வருடங்களாக பரப்புவது தவறானகருத்தாகும்.

அப்படி அவர்கூறியது 1970, காலப்பகுதியில் அதாவது அவர் மரணிப்பதற்கு 07, வருடங்களுக்கு முன்பு அதை கூறினார். ஆனால் அவர் சாவதற்கு சரியாக 11, மாதம் 12, நாட்களுக்கு முன்பு கூறியதுதான் வட்டுக்கோட்டை தீர்மானம்.

தந்தை செல்வா கடவுளிடம் ஈழத்தமிழர்களை கையளித்துவிட்டு இறக்கவில்லை. அவர் ஈழத்திழினத்தை "எழுச்சியுடன் போராடுங்கள்" என்று கூறிவிட்டே மரணித்தார் அந்த எழுச்சிக்கான தீர்மானமாகவே வட்டுக் கோட்டை தீர்மானம் "சுதந்திர தமிழீழமே தமிழர்களுக்கான தீர்வு" என்பதை ஆணித்தரமாக 1976, மே,14, ல் தந்தை செல்வா கூறி தமிழ் மக்களை எழுச்சியுடன் போராட அழைத்துவிட்டே மரணித்தார். இந்த உண்மையை புரிந்து கொள்வது அவசியம்.

வட்டுக்கோட்டை தீர்மானத்துக்கு எதிர்வரும் 2026, மே,14, ம் திகதியுடன் ஐம்பதாண்டு பொன்விழா நாளாகும். இந்த ஐம்பதாண்டில் பல தடைகள், தாமதங்கள், சோதனைகள், சாதனைகள், வேதனைகள், இழப்புக்கள், தியாகங்கள், இனப்படுகொலைகள், எல்லாவற்றிக்கும் முகம் கொடுத்த எமதினத்தின் விடுதலையை நோக்கிய பயணம் சர்வதேசத்தை நோக்கிச்சென்றுள்ளது,

தந்தை செல்வா வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள பண்ணாகம் எனும் ஊரில் மெய்கண்டான் வித்தியாலய மைதானத்தில் தமிழர் விடுதலை கூட்டணியின் முதலாவது தேசிய மாநாட்டில் மிகவும் தீர்க்கதரிசனமாக முன்மொழிந்த வரலாற்று சிறப்பு மிக்க தீர்மானம், "வட்டுக்கோட்டை தீர்மானம்" என அழைக்கப்படும். அந்த தீர்மானமானது இதுதான்.

இலங்கைத் தமிழர்கள் தங்களின் தொன்மை வாய்ந்த மொழியினாலும் மதங்களினாலும் வேறான கலாசாரம், பாரம்பரியம் ஆகியவற்றினாலும் ஐரோப்பிய படையெடுப்பாளர்களின் ஆயுதப்பலத்தினால் அவர்கள் வெற்றி கொள்ளப்படும் வரை பல நூற்றாண்டுகளாக ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் தனிவேறான அரசாகச் சுதந்திரமாக இயங்கிய வரலாற்றின் காரணமாகவும் எல்லாவற்றுக்கும் மேலாக தமது சொந்தப் பிரதேசத்தில் தம்மைத்தாமே ஆண்டுகொண்டு தனித்துவமாகத் தொடர்ந்திருக்கும் விருப்பம் காரணமாகவும் சிங்களவர்களிலிருந்து வேறு பட்ட தனித் தேசிய இனமாகவுள்ளனரென, இத்தால் பிரகடனப் படுத்துகின்றது.

1972 இன் குடியரசு அரசியலமைப்பு; தமிழ் மக்களைப் புதிய காலனித்துவ எசமானர்களான சிங்களவர்களால் ஆளப்படும் ஒர் அடிமைத் தேசிய இனமாக ஆக்கியுள்ளதென்றும் தமிழ்த் தேசிய இனத்தின் ஆட்சிப்பிரதேசம், மொழி, பிரசாவுரிமை, பொருளாதார வாழ்க்கை, தொழில் மற்றும் கல்வி வாய்ப்புக்கள் ஆகியவற்றை இழக்கச்செய்வதற்கு சிங்களவர்கள் தாம் முறைகேடாகப் பறித்துக் கொண்ட அதிகாரத்தைப் பயன்படுத்துகின்றனரென்றும் அதன்மூலம் தமிழ் மக்களின் தேசியத்திற்கான இயற்பண்புகள் யாவும் அழிக்கப்படுகின்றனவென்றும் இம்மாநாடு உலகுக்கு அறிவிக்கின்றது.

தமிழ் ஈழம் என்ற தனிவேறான அரசொன்றைத் தாபிப்பதற்கான அதன் ஈடுபாட்டுக்கடப்பாடு தொடர்பில், வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களுக்கு வெளியே வாழ்கின்றவர்களும் வேலை செய்கின்றவர்களுமான பெரும்பான்மையான பெருந்தோட்டத் தொழிலாளர்களின் ஒரு தொழிற்சங்கமான இலங்கைத் தொழிலாளர்காங்கிரஸ் வெளிப்படுத்திய அதன் ஒவ்வாமைகளைக் கருத்தில் கொள்கின்ற அதேவேளையில், ஒவ்வொரு தேசிய இனத்தினதும் உள்ளியல்பான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சுதந்திரமான, இறைமைபொருந்திய, சமயச் சார்பற்ற, சமதர்மத் தமிழீழ அரசை மீட்டளித்தலும் மீள உருவாக்குதலும் இந்நாட்டில் தமிழ்த் தேசிய இனம் உளதாயிருத்தலைப் பாதுகாக்கும் பொருட்டுத் தவிர்க்க முடியாததாகியுள்ளதென இம்மாநாடு தீர்மானிக்கின்றது. இம்மாநாடு மேலும் பிரகடனப்படுத்துவதாவது

(அ) தமிழ் ஈழ அரசு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள மக்களைக் கொண்டதாக இருக்க வேண்டுமென்பதுடன் இலங்கையின் எந்தப்பகுதியிலும் வசிக்கின்ற தமிழ் பேசுகின்ற மக்களுக்கும் தமிழ் ஈழத்தின் பிரசாவுரிமையை விரும்பித்தெரிகின்ற உலகின் எப்பகுதியிலும் வசிக்கின்ற ஈழ வம்சாவழித் தமிழர்களுக்கும் முழுமையான, சமமான பிரசாவுரிமைகளை உறுதிப்படுத்தவும் வேண்டும். தமிழ் ஈழத்தின் ஏதேனும் சமயத்தைச் சேர்ந்த அல்லது ஆட்சிப்பிரதேசத்தைச் சேர்ந்த சமூகமொன்று வேறு ஏதேனும் பிரிவினரின் மேலாதிக்கத்திற்குட்படாதிருத்தலை உறுதிப்படுத்தும் பொருட்டு தமிழ் ஈழத்தின் அரசியலமைப்பு சனநாயகப் பன்முகப்படுத்தற் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும்.

(ஆ) தமிழ் ஈழ அரசில் சாதி ஒழிக்கப்படவேண்டுமென்பதுடன், பிறப்பின் அடிப்படையில் பின்பற்றப்படும் பெருங்கேடான பழக்கமான தீண்டாமை அல்லது ஏற்றத்தாழ்வு முற்றாக ஒழித்துக் கட்டப்படவும் எவ்வகையிலேனும் அதனைக் கடைப்பிடித்தல் சட்டத்தால் தண்டிக்கப்படவும் வேண்டும்.

(இ) தமிழ் ஈழம் அவ்வரசிலுள்ள மக்கள் சார்ந்திருக்கக்கூடிய எல்லாச்சமயங்களுக்கும் சமமான பாதுகாப்பும் உதவியும் வழங்குகின்ற சமயச்சார்பற்ற ஓர் அரசாக இருக்க வேண்டும்.

(ஈ) தமிழ் அரச மொழியாக இருக்க வேண்டும் எனினும் தமிழ் ஈழத்தில் சிங்களம் பேசுகின்ற சிறுபான்மைகள் அவர்களின் மொழியில் கல்வியையும் அலுவல்களையும் தொடர்வதற்கான உரிமைகள் சிங்கள அரசிலுள்ள தமிழ் பேசும் சிறுபான்மைகள் பாதுகாக்கப்படும் சரி எதிரிடையான அடிப்படையில் பாதுகாக்கப்பட வேண்டும்.



(உ) தமிழ் ஈழத்தில் மனிதனால் மனிதன் சுரண்டப்படுதல் தடை செய்யப்படும். உழைப்பின் மகத்துவம் பாதுகாக்கப்படும். சட்டத்தினால் அனுமதிக்கப்படும் எல்லைகளுக்குள் தனியார் துறையின் இருப்புக்கு அனுமதி வழங்கப்படுகின்ற அதே வேளையில், பண்டங்களின் உற்பத்தி மற்றும் விநியோகம் என்பன அரச உரிமையின் கீழ் அல்லது அரச கட்டுப்பாட்டுடன் மேற்கொள்ளப்படும். பொருளாதார அபிவிருத்தி சோசலிசத் திட்டமொன்றின் அடிப்படையில் ஏற்படுத்தப்படும். ஒரு தனிநபரின் அல்லது குடும்பத்தின் செல்வம் தொடர்பில் உச்சவரம்பு விதிக்கப்படும். இவ்வகையில் தமிழ் ஈழம் ஒரு சமதர்ம அரசாக இருக்க வேண்டும். தமிழ் தேசிய இனத்தின் இறைமையையும் சுதந்திரத்தையும் வென்றெடுப்பதற்கான போராட்டத்திற்கான செயல்திட்டமொன்றை மிதமிஞ்சிய தாமதமின்றி வகுத்தமைத்து அதனைத் தொடங்கவேண்டுமென தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் செயற்குழுவை இம்மாநாடு பணிக்கின்றது. மேலும் இம்மாநாடு, சுதந்திரத்திற்கான இப்புனிதப்போரில் தம்மை முழுமையாக அர்ப்பணிக்க முன்வரும்படியும் இறைமையுள்ள தமிழ் ஈழ அரசென்ற இலக்கு எட்டப்படும்வரை அஞ்சாது போரிடும் படியும் பொதுவில் தமிழ்த் தேசிய இனத்துக்கும் குறிப்பாக தமிழ் இளைஞர்களுக்கும் அறைகூவல் விடுக்கின்றது.

இவ்வாறுதான் 1976 மே 14, ல் தேதியன்று தந்தை செல்வா மகாநாட்டு மேடையில் பேசி அமர்ந்தார். இந்த தீர்மானத்தை மூத்த தமிழ் அரசியல்வாதியும், வழக்கறிஞருமான மு. சிவசிதம்பரம் வழி மொழிந்து உரையாற்றினார்.

இந்த தீர்மானம் நிறைவேற்றி சரியாக 11, மாதம்,12, நாட்களால் 1977, ஏப்ரல், 26, தந்தை செல்வா மரணித்தார். தந்தை செல்வா மரணித்து சரியாக 02, மாதம்,25, நாட்களால் இலங்கையின் 08, வது நாடாளுமன்ற தேர்தல் 1977, யூலை,21.ல் இடம்பெற்றது அதுதான் இலங்கையில் நடைபெற்ற தொகுதிமுறையிலான இறுதித்தேர்தல் இந்த பொதுத்தேர்தலில் வட்டுக்கோட்டை தீர்மானத்துக்கு வடகிழக்கு மக்களின் அங்கீகாரம் பெறும் நோக்கில் தமிழர் விடுதலை கூட்டணி தேர்தல் விஞ்ஞாபனத்தை முதன்மைபடுத்தி வடகிழக்கில் 24, தொகுதிகளில் வேட்பாளர்களை நிறுத்த திட்டமிட்டது எனினும் புத்தளத்தொகுதியில் வேட்பாளராக முன்மொழியப்பட்ட டாக்டர் ஐ. எம்.இலியாஸ் இறுதி நேரத்தில் சம்மதிக்காமையால் புத்தளம் தொகுதி கைவிடப்பட்டது.

**ஏனைய 23, தொகுதிகளில் வேட்பாளர்களாக**

1. **காங்கேசன்துறை-அ.அமிர்தலிங்கம்•**
2. **யாழ்ப்பாணம்-வி.யோகேஸ்வரன்•**
3. **நல்லூர்- மு.சிவசிதம்பரம்•**
4. **ஊர்காவல்துறை - க.பொ.இரத்தினம்•**
5. **வட்டுக்கோட்டை- தா.திருநாவுக்கரசு•**
6. **கோப்பாய்- சி.கதிரவேற்பிள்ளை•**
7. **உடுவில்- மு.தர்மலிங்கம்•**
8. **உடுப்பிட்டி- த.இராசலிங்கம்•**
9. **பரித்தித்துரை- கே.துரைரெட்ணம்•**
10. **சாவகச்சேரி- வி.என்.நவரெட்ணம்•**
11. **கிளிநொச்சி- வீ.ஆனந்தசங்கரி•**
12. **முல்லைத்தீவு- எக்ஸ்.எம்.செல்லத்தம்பி•**
13. **மன்னார்- பி.ஏ.சூசைதாசன்•**
14. **வவுனியா- தா.சிவசிதம்பரம்•**
15. **திருகோணமலை-இரா.சம்மந்தன்•**
16. **மட்டக்களப்பு இரட்டை தொகுதி - செ.இராசதுரை•**
17. **மட்டக்களப்பு மற்றவர்- காசி ஆனந்தன்**
18. **பட்டிருப்பு, பூ.கணேசலிங்கம்•**
19. **பொத்துவில்- எம். கனகரெத்தினம்•**
20. **கல்குடா- எஸ் .சம்மந்தமூர்த்தி.**
21. **கல்முனை- ஏ. எம். சம்சுதீன்**
22. **சம்மாந்துறை- எச். எல். எம். ஹாசீம்**
23. **மூதூர்,எஸ். எம். மக்கீன்**

ஆகிய 23, வேட்பாளர்களும் நிறுத்தப்பட்டனர்

இதில் கல்முனை, சம்மாந்துறை,மூதூர் ஆகிய மூன்று தொகுதிகளிலும் வேட்பாளராக நிறுத்தப்பட்டவர்கள் வெற்றிபெறவில்லை.

மட்டக்களப்பு இரட்டை அங்கத்தவர் தொகுதியில் தமிழர் விடுதலை கூட்டணி உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்ட காசி ஆனந்தன் வெற்றி பெறவில்லை.

கல்குடா தொகுதியில் வேட்பாளர் சம்மந்தமூர்த்தி வெற்றிபெறவில்லை. அங்கு ஐக்கிய தேசிய கட்சி கே.டபுள்யூ. தேவநாயகம் 560, மேலதிகவாக்குகளால் வெற்றியீட்டினார்.

வட்டுக்கோட்டை தீர்மானத்தை கல்குடாவில் தோல்வியடைய வைத்தமையால் கே.டபுள்யூ தேவநாயகத்துக்கு ஜே ஆர் ஜெயவர்தன நீதி அமைச்சர் பதவியை வழங்கி பாராட்டியதுடன் அவரைக்கொண்டே 1979, ல் பயங்கரவாத தடைச்சட்டத்தை பாராளுமன்றில் சமர்பிக்கவைத்து நிறைவேற்றினார் என்பது வரலாறு.

வடகிழக்கு மக்கள் 4,21,488 பேர் வட்டுக்கோட்டை தீர்மானத்துக்கு ஆதரவு வழங்கினர். 18, பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழர் விடுதலை கூட்டணியில் தெரிவு செய்யப்பட்டு இலங்கை வரலாற்றில் ஒரு தமிழர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் முதன் முதலாக எதிர்கட்சி தலைவரானார்.

இன்று 2026, மே,14, ல் 50, வருடங்கள் கடந்தும் அந்த ஆணை மீளப்பெறவில்லை அது தொடர்ந்தும் பொன்விழா காணும் நிலையில் எழுச்சி கொண்டு ஈழ விடுதலைப் போராட்டம் அகிம்சை போராட்டம், ஆயுதப் போராட்டமாக மாறி 2009, மே,18, ல், போர் ஈழத்தில் மௌனிக்கப்பட்டு தற்போது இராஜதந்திர ரீதியாக முன்னகர் தப்பட்டுள்ளது என்பதே உண்மை.

இன்னுமொரு ஆயுதப்போராட்டம் ஈழத்தமிழர்களுக்கு தேவையில்லை ஆனால் ஐம்பது ஆண்டு கடந்தும் ஈழத்தமிழினம் பூரண சுதந்திரத்திற்காக அனைத்துலக சமூகத்தில் நீதியை எதிர்பார்த்து நிற்கிறது என்பதை அனைவரும் புரிந்துகொள்வதுடன் வரலாறுகள் மறைக்கப்படக்கூடாது என்பதே உண்மை.

கடந்தகால வரலாறுகளையும் நிகழ்கால நிகழ்வுகளையும் ஒப்பிட்டு, பகுப்பாய்வு செய்வது ஒரு முக்கிய அறிவார்ந்த செயல்பாடாகும். வரலாறு என்பது மனித இனம், நாகரிகம் மற்றும் சமூகங்கள் கடந்து வந்த பாதையை ஆவணப்படுத்துகிறது.

• • •




# அரசியல் மயமான மே தின மேடைகள்
# ‘மறக்கப்பட்ட உழைக்கும் வர்க்கம்’

**விதுரன்**

இலங்கையில் நடைபெற்று நிறைவடைந்திருக்கும் சர்வதேச தொழிலாளர் தினம் தொழிலாளர்களின் வியர்வையையும் உரிமைகளையும் கொண்டாடும் நாளாக அமைவதற்குப் பதிலாக, அரசியல் அதிகாரப் போட்டிகளுக்கான போர்க்களமாகவும், ஒருவரையொருவர் வசைபாடும் மேடையாகவும் மாறியிருந்ததை நுணுக்கமாக அவதானிக்க முடிகிறது.



இம்முறை மேதின நிகழ்வுகளில் முன்வைக்கப்பட்ட பிரகடனங்கள் மற்றும் அரசியல் தலைவர்களின் உரைகளை ஆழமாகப் பகுப்பாய்வு செய்யும்போது, அவை உழைக்கும் வர்க்கத்தின் அடிப்படைத் தேவைகளை விடவும், வரப்போகும் தேர்தல்களையும், கட்சிப்பிளவுகளையும், ஆட்சித் தகைமைகளையுமே மையப்படுத்தியிருந்தன என்பது புலனாகிறது.

பிரதான அரசியல் நீரோட்டத்தில் உள்ள கட்சிகள் அனைத்தும் தொழிலாளர் தினத்தை தமது பலத்தைக் காட்டும் கருவியாகவே பயன்படுத்தின.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, என்று அனைத்துமே மேதினத்தை ஒரு ‘முன்கூட்டிய தேர்தல் பிரசார மேடையாகவே’ கையாண்டன.

ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிதறிக்கிடக்கும் ராஜபக்ஷக்களின் ஆதரவுத் தளங்கள் ஆட்களை சேர்த்து பிரசாரம் செய்ய முடியாத கையறு நிலையை உணர்ந்து பௌர்ணமி தினத்தை பயன்படுத்தி தம்மை பக்திமிக்க பௌத்தர்களாக காண்பித்து விட்டனர்.

தொழிலாளர்களின் எட்டு மணிநேர வேலை, ஊழியர் சேமலாப நிதிப் பாதுகாப்பு போன்ற விடயங்கள் பெயரளவில் பேசப்பட்டாலும், உரைகளின் பெரும்பகுதி ஊழல் குற்றச்சாட்டுகள், சிறைவாசம் பற்றிய எச்சரிக்கைகள் மற்றும் மாகாண சபைத்தேர்தல் சவால்களாலேயே நிரப்பப்பட்டிருந்தன.

தேசிய மக்கள் சக்தியின் மேதினக் கூட்டங்களில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் உரை, உழைக்கும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான திட்டவரைபாக இருப்பதை விடவும், கடந்த கால ஆட்சியாளர்களுக்கு விடுக்கப்பட்ட நேரடி எச்சரிக்கையாகவே அமைந்தது.

‘இந்த ஆண்டு பலர் சிறை செல்வார்கள்’ என்றும், ராஜபக்ஷகளின் சொத்துக்கள் அரசுடமையாக்கப்படும் என்றும் அவர் விடுத்த முழக்கங்கள், மக்கள் மத்தியில் ஒருவிதமான ‘நீதி வழங்கும்’ எதிர்பார்ப்பைத் தூண்டினாலும், அது மேதினத்தின் உண்மையான தத்துவத்திலிருந்து விலகிச் சென்றதைக் காட்டுகிறது.

குறிப்பாக, ‘தித்வா’ புயல் மற்றும் சர்வதேசப் பொருளாதாரச் சிக்கல்களுக்கு மத்தியில் 60 ஆயிரம் கோடி ரூபா நிவாரணம் வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டாலும், நாளாந்தம் விலைவாசி உயர்வால் நசுக்கப்படும் தொழிலாளிக்கு நிலையான பொருளாதாரத் தீர்வு எங்கே என்ற கேள்விக்கு அங்கு தெளிவான பதில் இருக்கவில்லை.

மேலும், 21 இடங்களில் மேதினக் கூட்டங்களை நடத்தி ஆளும் தரப்பு தனது உட்கட்சி அதிருப்திகளை மௌனிக்கச்செய்யவே இவ்வாறானதந்திரோபாயங்களைக் கையாண்டுள்ளது என்ற யதார்த்தத்தையும் தவிர்க்க முடியாததாக உள்ளது.

மறுபுறம், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் உரை, அரசாங்கத்திற்கு விடுக்கப்பட்ட சவால்களுடனான மேடையாகவே அமைந்தது. மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு அவர் விடுத்த பகிரங்க சவாலும், அடுத்த மேதினத்தை முதலமைச்சர்களுடன் கொண்டாடுவோம் என்ற கருத்தும், தொழிலாளர் நலனை விடவும் ‘அதிகாரக் கைப்பற்றல்’ மீதே அவரது கவனம் இருப்பதை உறுதி செய்துள்ளது.



ரணில் விக்கிரமசிங்கவுடனான ‘ஒற்றுமை’ குறித்த பேச்சுகள்,கொள்கை அடிப்படையிலான இணைவை விடவும், தேசிய மக்கள் சக்தியை வீழ்த்துவதற்கான சந்தர்ப்பவாத அரசியலாகவே விமர்சகர்களால் பார்க்கப்படுகிறது. தொழிலாளர் உரிமைகள் பறிக்கப்படுவதாக அவர் குற்றம் சாட்டினாலும், அதற்கான மாற்றுப் பொருளாதாரக் கொள்கை என்ன என்பதை விளக்குவதை விட, அரசாங்கத்தின் ‘பொய்யர்களை’ அம்பலப்படுத்துவதிலேயே அவர் அதிக நேரம் செலவிட்டிருக்கின்றார்.

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மே தினப் பிரகடனங்கள் தென்னிலங்கை அரசியலில் இருந்து முற்றிலும் மாறுபட்டவொரு தளத்தில் இயங்கின. கிளிநொச்சியில் சிவஞானம் சிறிதரன் மற்றும் மாங்குளத்தில் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் ஆற்றிய உரைகள், ஈழத் தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளையும் ‘சுயநிர்ணய’ உரிமையையும் மீண்டும் ஒருமுறை உரக்கச் சொன்னன.

‘யாமார்க்கும் குடியல்லோம்’ என்ற முழக்கம், சிங்களப் பேரினவாத மேலாதிக்கத்திற்கு எதிரான தார்மீகக் குரலாக ஒலித்தாலும், வடகிழக்கு தொழிலாளர்களின் - குறிப்பாக மீனவர்கள் மற்றும் விவசாயிகளின் - அன்றாட வாழ்வாதாரப் போராட்டங்கள் அரசியல் கோசங்களுக்குள் அமிழ்ந்து போயின.

பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கம், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி, காணி அபகரிப்பு போன்ற நீண்டகால அரசியல் கோரிக்கைகள் மேதினப் பிரகடனத்தில் முதன்மை பெற்றன.

அதேநேரம், தென்னிலங்கை இடதுசாரித் தலைவர்கள் வடகிழக்கு மக்களின் நம்பிக்கையைச் சிதைத்து வருவதாக சுமந்திரன் முன்வைத்த விமர்சனம், இலங்கை அரசியலில் இன ரீதியான துருவமுனைப்பு இன்னும் தீவிரமாகவே இருப்பதை வெளிப்படுத்தியுள்ளது.

13ஆவது திருத்தத்தை நிராகரிப்பதும், சர்வதேச விசாரணையைக் கோருவதும் நியாயமானது என்றாலும் தொழிலாளர் தினத்தின் உலகளாவிய வர்க்கப் போராட்ட சிந்தனையோடு எவ்வாறு இணையும் என்பது பெருங்கேள்குரிய விடயமாகும்.

இதற்குள் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, விஜேதாச ராஜபக்ஷ தலைமையில் தனது இருப்பைத் தக்கவைத்துக் கொள்ளப் போராடுவதை பொரளைக் கூட்டத்தில் காண முடிந்தது.

‘கட்சியை யாராலும் வீழ்த்த முடியாது’ என்ற தற்காப்பு உரைகள், கட்சியின் உட்கட்சிப் பூசல்களையும் பிளவுகளையும் மூடிமறைக்கும் முயற்சியாகவே தெரிந்தன. திறைசேரியில் பணம் காணாமல் போனதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் மற்றும் 18 மாதங்களில் ஒரு இலட்சம் தொழிற்சாலைகள் மூடப்பட்டதாகச் சொல்லப்படும் தரவுகள் பாரதூரமானவை என்றாலும், அவற்றை அரசியல் கருவியாகப் பயன்படுத்துவதைத் தாண்டி, அத்தொழிலாளர்களுக்கு அந்தக் கட்சி வழங்கப்போகும் பாதுகாப்பு என்ன என்ற கேள்விக்கு பதிலே இல்லை.



அனைத்துக் கட்சிகளின் உரைகளிலும் பொதுவாகக் காணப்பட்ட ஒரு அம்சம் ஊழலாகும். நிலக்கரி ஊழல், மாயமான நிதி, அரசியல்வாதிகளின் சொத்து விபரங்களை வெளிப்படுத்தல் என்று ஊழலை மையப்படுத்தியே 2026 மேதினம் நகர்ந்தது.

இதுவொரு ஆரோக்கியமான போக்காகத் தெரிந்தாலும், உண்மையில் தொழிலாளியின் சம்பள உயர்வு, தொழிற்சங்க உரிமைகள், வேலைத்தளப் பாதுகாப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு என்பன இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டன.

முன்னிலை சோசலிசக் கட்சியின் துமிந்த நாகமுவ குறிப்பிட்டது போல, புதிய அரசாங்கம் ‘நவதாராளவாதத்திற்குப் பழகிப்போய்’ சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அடிபணிந்து செயற்படுவதால், 2028இல் நாடு பாரிய வீழ்ச்சியைச் சந்திக்கும் என்ற எச்சரிக்கை கவனிக்கத்தக்கது.

ஆனால், இவ்வாறான கொள்கை ரீதியான விமர்சனங்கள் பிரதான ஊடகங்களிலும் பெரிய மேடைகளிலும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வில்லை. அதுமட்டுமன்றி அவர்களும் ஆளும் தரப்பிற்கு மாற்று அணியாக தங்களை காண்பிக்கவே முயன்றிருந்தனர்.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில், 2026 மே தினம் என்பது இலங்கையில் ஒரு ‘அரசியல் கண்காட்சியாகவே’ நிகழ்ந்தேறியிருக்கிறது. தொழிலாளர்கள் தமது உரிமைகளுக்காகத் திரளுவதற்குப் பதிலாக, தத்தமது அரசியல் தலைவர்களின் ‘சக்திப் பிரயோகங்களுக்கு’ பின்னணியாகவே பயன்படுத்தப்பட்டனர்.

தேர்தல் வாக்குறுதிகள், ஒருவரையொருவர்

தொடர்ச்சி: பக்கம் 14

# அதிகாரத்தின் பின்னால் ஓடுவது கம்பன் குணம் அல்ல

பத்திரிகையாளர் **அ.நிக்ஸன்**



*** அன்று மன்னர்களின் புகழ் பாடுவதை தூக்கி எறிந்த கம்பன்...**

*** இன்று மன்னர்களுக்கு விருது வழங்கும் கம்பன் கழகம்**

*** பொன்னாடை, மாலைகளைத் தேடி ஓடும் ஈழத் தமிழ் பேராசிரியர்கள்**

அதிகாரத்தில் இருப்பவர்களுக்குப் பின்னால் ஓடுவது கம்பனின் குணம் அல்ல. மன்னர்களை விட 'அறம்' சார்ந்த மக்களே உயர்ந்தவர்கள் என்று கம்பன் வாழ்ந்து காட்டினார்.

அதனால்தான், இன்று பொருத்தம் அற்ற அரசியல் பிரதிநிதிகளுக்கு 'கம்பன் புகழ்' விருது வழங்குவதை கம்பன் இருந்திருந்தால், அவரே தடுத்திருப்பார் என்பது ஆர்வலர்கள் பலரின் வாதம், கவலையும் கூட...

கம்பன் சோழ நாட்டை விட்டு வெளியேறி, தனக்கு உண்மையாக மதிப்பளித்த சடையப்ப வள்ளல் போன்றவர்களின் ஆதரவில் வாழ்ந்தார். இதனால் தான், தனது காவியத்தின் பல இடங்களில் மன்னர்களைப் புகழாமல், தன்னை ஆதரித்த சடையப்ப வள்ளலை நன்றியோடு போற்றினார்--

குலோத்துங்கன் என்று அழைக்கப்படும் சோழ மன்னன் கம்பனை தனது அரண்மனைக்கு உட்பட்ட ஒரு சாதாரண அரசவைக் கவிஞராக நடத்தினான்.

ஒருமுறை மன்னன், கம்பனை அழைத்து "நாளைக்குள் இராமாயணத்தை எழுதி முடிக்க வேண்டும்" என கட்டளையிட்டான். ஆனால் கம்பன் கவித்துவ சுதந்திரத்தை விரும்புபவர். அதிகாரத்தின் முன் தனது கலை அடிபணியக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தார். அக்காலத்தில் மன்னர்கள் தங்களைப் பற்றிப் புகழ்ந்து பாடச் சொல்லி வற்புறுத்துவது வழக்கம்.

ஆனால் கம்பன், "இராமனைப் பாடும் வாயால் ஒரு சாதாரண மனிதனை அதாவது மன்னனை உயர்த்திப் பாட மாட்டேன்" என்பதில் உறுதியாக இருந்தார். ஒருமுறை மன்னன், கம்பனை ஏளனம் செய்த போது, கம்பன் தனது தன்மானத்தை விட்டுக் கொடுக்க விரும்பவில்லை.

இதனால், ஆத்திரமடைந்த மன்னன் "நீ என் நாட்டை விட்டுப் போ" என்று சொன்னபோது, கம்பன் கலங்கவில்லை. "நீ மட்டும் தான் மன்னனா?" என்று பதில் கேள்வி கேட்டு விட்டு வெளியேறினான். தனக்கு உண்மையான மதிப்பளித்த சடையப்ப வள்ளல் போன்ற நல்லுள்ளம் கொண்டவர்களின் ஆதரவில் வாழ்ந்தார்.

இதனால் தான், தனது காவியத்தில் பல இடங்களில் மன்னர்களைப் புகழாமல், தன்னை ஆதரித்த சடையப்ப வள்ளலை நன்றியோடு போற்றினார் கம்பன். இத்தகைய பண்பு கொண்ட - தமிழ் மரபையும் தமிழ் உணர்வையும் காத்த கம்பனுக்குக் கழகம் அமைத்து செயற்படும் கம்பவாருதி ஜெயராஜ், கம்பன் கழகப் பெயரில் ஜனாதிபதி அநுரவுக்கு விருது வழங்கியதை என்னென்று சொல்ல?

ஜெயராஜ், 1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறியது உண்மைதான். ஆனால், அவர் விடுதலைப் புலிகளால் கட்டாயமாக வெளியேற்றப்பட்டாரா அல்லது அப்போதைய போர்ச் சூழலால் இடம்பெயர்ந்தாரா என்பதில் பல கருத்துக்கள் நிலவுகின்றன.

சரி, அப்படித்தான் விடுதலைப் புலிகள் வெளியேற்றினார்கள் அல்லது புலிகளின் கலை இலக்கியச் செயற்பாடுகளில் உடன்பாடு இல்லை என்று கூறி, அன்று ஜெயராஜ் வெளியேறி இருந்தாலும், அது கம்பன் வழியில் ஏற்புடையது என்றே எடுத்துக் கொள்வோம்.

ஏனெனில், சோழ மன்னனை புகழ்ந்து பாட விரும்பாத கம்பனைப் போன்று, கம்பன் நெறிகளை பின்பற்றி வருபவர் என்ற வகையில் புலிகள் சொல்வதை செய்ய முடியாது என்று கூறி ஜெயராஜ் யாழ் குடாவை விட்டு வெளியேறியதாகக் கருதப்பட்டால், அதில் ஒரு நியாயம் உண்டு என்று சொல்வோமே!

ஆனால், அங்கே ஒரு நேர்மையான கேள்வியும் எழுகிறது அல்லவா? அதாவது, அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு பின்னால் ஓடுவது கம்பனின் குணம் அல்ல என்ற பண்புக்கு அமைய ஜெயராஜ அன்று செயற்பட்டார் என்றால், ஏன் இன்று அநுரகுமார திஸாநாயக்கவுக்கும், மைத்திரிபால சிறிசேனவுக்கும் விருது வழங்க வேண்டும்?

மைத்திரிபால ஜனாதிபதியாக இருந்தபோது, 2015 மே மாதம் 5ஆம் திகதி கம்பன் கழகம் விருது வழங்கியது. ஆனால், 2018 ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதி இரவோடு இரவாக மகிந்த ராஜபக்சவை அழைத்து பிரதமர் பதவி வழங்கியிருந்தார்.



நல்லாட்சி என்று மார்தட்டிய தமிழர்கள் சிலர் அப் போது வெட்கித் தலை குனிந்தனர். இன்று அதன் நீட்சியாக அநுரவுக்கு விருது. ஆகவே, அதிகாரத்தில் இருப்பவர்களுக்குப் பின்னால் ஓடுவது கம்பனின் குணம் அல்ல என்ற பண்பை, 2009 ஆம் ஆண்டு மே மாதம் வரையும் பின்பற்றிய ஜெயராஜ், ஏன் 2009 ஆம் ஆண்டுக்கு பின்னரான சூழலில் அப் பண்பை கைவிட்டார் என்ற கேள்வியில் ஒரு உண்மை உண்டல்லவா?

அதுவும், ஈழத் தமிழரின் அரசியல் உரிமை விடயத்தில் கடும் போக்கைக் கொண்ட அதிகாரம் படைத்த - பௌத்த சிந்தனை கொண்ட மன்னர்கள் பின்னால் ஏன் ஜெயராஜ் ஓட வேண்டும்?

ஈழத் தமிழர்களின் அரசியல் உரிமைப் போராட்டம், 30 ஆண்டு கால ஆயுதப் போராட்டத்தோடு மாத்திரம், ஆரம்பித்து முடிந்து போன கதையல்லவே? 1921 இல் அருணாச்சலம் தமிழர் மகா சபையை உருவாக்கியது முதல், ஒரு நூற்றாண்டு கால நீண்ட வரலாற்றைக் கொண்டது, இந்த முரண்பாடு.

ஆகவே, இந்த உண்மைகளைத் தவிர்த்துவிட்டு, சிங்களத் தலைவர்களுக்கு விருது வழங்குவதன் பின்னணி என்ன? "இராமனைப் பாடும் வாயால் ஒரு சாதாரண மனிதனை அதாவது மன்னனை உயர்த்திப் பாட மாட்டேன்" என்று அடம் பிடித்த கம்பனின் பண்பை ஜெயராஜ் ஏன் மீறினார்?

இது கம்பனின் கொள்கைகளுக்கு முரணானது அல்லவா? மன்னர்களை விட 'அறம்' சார்ந்த மக்களே உயர்ந்தவர்கள் என்று தான் கம்பன் வாழ்ந்து காட்டினார் அல்லவா? அரசியல் அதிகாரத்தைப் பற்றிச் சொல்லும்போது, மன்னன் என்பவன் ஒரு கருவி மட்டுமே. மக்களே உயிர் என்று குறிப்பிடுகிறார் கம்பன்.

"மன்னவன் உயிர்த்தே மலர்தலை உலகம்" என்ற பாடலின் மூலம், ஒருவருக்கு விருது வழங்குவது என்பது அவர் வகிக்கும் பதவியை பார்த்து அல்ல, அவர் மக்களுக்கு செய்த அறப்பணிகளைப் பார்த்தே அமைய வேண்டும் என்பதை உணர்த்துகிறான் கம்பன்.

கம்பன் விருது என்பது தமிழ் புலமையோடு சார்ந்தவர்களுக்குத் தான் வழங்க வேண்டும். ஆனால், அநு - மைத்திரிஆகியோர், தமிழ் மொழிக்கும், ஈழத் தமிழ் வாழ்வியல் பண்பாட்டுக்கும் என்ன செய்தனர்?

சமாதான பேச்சு காலத்தில், அநுர நிகழ்த்திய உரைகள் போராட்டத்துக்கு எதிரானது மாத்திரமல்ல, தமிழர் மரபுரிமை பண்பாடு,தமிழர் தாயகம் போன்ற அனைத்திற்கும் எதிராக இருந்ததை நாடாளுமன்ற செய்தியாளராக நான் இருந்த போது நேரடியாக கேட்டிருக்கிறேன்.

"இராம இராஜ்ஜியமே அழிந்து போகட்டும்" என கம்பன் பாடிய வரிகளை வைத்துப் பட்டிமன்றம் நடத்தும் கம்பன் கழகம், போரை ஆதரித்த கட்சிப் பின்னணியைக் கொண்டவர்களுக்கு எதற்காக விருது வழங்கியது?

பல இலட்சம் உயிர்களைப் பலி கொண்ட அந்தப் போரின் தீவிரத்தை ஆதரித்தவர்களுக்கு இவ் விருது தகுமா? வழங்கப்பட்ட இந்த அங்கீகாரத்தின் பின்னணியில் உள்ள அரசியல் உள் நோக்கம் என்ன? இதன் மூலம் உணர்த்தப்படும் செய்தி தான் என்ன?

அதேவேளை, "காலமாற்றத்தால் சிதைந்து வரும் ஈழத் தமிழரின் தொன்மையான மரபுரிமைகளையும், பண்பாட்டு விழுமியங்களையும் ஆவணப்படுத்தி அடுத்த தலைமுறைக்குக் கடத்த வேண்டிய அறம் சார் கடமை தமிழ் மொழித்துறைப் பேராசிரியர்களுக்கு உண்டு.

ஆனால், ஈழத் தமிழ் பேராசிரியர்கள் பலரும் இத்தகைய ஆய்வுகளை மேற்கொள்வதில்லை. பெயருக்கும் புகழுக்கும் கம்பன் கழகத்திற்குப் பின்னால் வெறுமனே ஓடுகின்றனர். குறிப்பிட்ட ஒரு சில பேராசிரியர்கள் மாத்திரமே. தமிழியல் ஆய்வுகளை செய்கின்றனர்.

ஈழத்தமிழ் மொழி கல்விப் புலங்கள் வெறும் போதனை மையங்களாக மட்டுமன்றி, சமூகத்தின் வேர்களைத் தேடும் ஆய்வு மையங்களாக மாற வேண்டும். அப்போதுதான் ஈழத் தமிழின் தொன்மைக்கும் நவீனத்திற்கும் இடையிலான இடைவெளியை நிரப்ப முடியும்.

போராட்ட வரலாற்றில் வலிகளைக் கண்ட ஒரு சமூகத்தின் கூட்டு மனக்காயங்களை (Collective Trauma) ஆற்றும் மருந்தாக அந்த ஆய்வுகள் இருக்க வேண்டும். ஈழத்தமிழ் இலக்கியங்கள் வெறும் சொற்களின் குவியல் அல்ல. அவை, தமிழினத்தின் வாழ்வியல் கருவூலங்கள்.

எனவே, இலக்கியங்களுக்குப் பின்னால் மறைந்துள்ள பண்பாட்டுக் கூறுகளை அறிவியல் பூர்வமாக ஆய்வு செய்து உலக அரங்கில் தமிழுக்கான இடத்தை உறுதிப்படுத்த வேண்டும். தமிழ் மரபுரிமை குறித்த புதிய கண்டுபிடிப்புகளும், நுண் ஆய்வுகளும் பல்கலைக்கழகங்களிலிருந்து வெளிவரும்போது அவை உலகளாவிய அங்கீகாரத்தைப் பெறுகின்றன.

ஆனால், ஈழத் தமிழ் அறிஞர்கள் பலரும் இவ்வாறான ஆய்வுகளில் ஈடுபடாமல் கம்பன் கழகத்தின் மாலை, பொன்னாடைகள் மற்றும் விருதுகளுக்காக ஏங்கி ஓடுவது பெரும் வேடிக்கை.

ஈழத்து இலக்கியங்களை வெறும் ரசனை சார்ந்து அணுகாமல், நவீன கோட்பாடுகள் - சமூகவியல் கண்ணோட்டத்தில் ஆழமான விமர்சன ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும். காலனித்துவ - மேலைத்தேய ஆய்வு முறைகளை கடந்து, ஈழத்தமிழர் வாழ்வியலுக்கு நெருக்கமான, புதிய ஆய்வு முறைகளை உருவாக்க வேண்டும்.

ஈழத்து இலக்கியங்களை ஏனைய மொழிகளுக்கு மொழிபெயர்த்து, சர்வதேச ஆய்வுச் சமூகத்தின் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும். ஈழத்தில் இருந்து வெளியேறி உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களின் "புலம்பெயர் இலக்கியங்களை" (Diaspora Literature) ஈழத்து இலக்கியத்தின் ஒரு அங்கமாக ஏற்று அவற்றின் மீதான ஆய்வுகளை விரிவுபடுத்த வேண்டும்.

இது தான் தமிழ்ப் பணி. கம்பராமாயாண கதைகள் மற்றும் அதன் பாடல்களைக் கூட சமகால அரசியல் - பொருளாதார நோக்கில் ஆய்வு செய்து விவாதிக்க முடியும்.

1) அதிகாரப் பரவலாக்கம் vs ஒற்றையாட்சி, அதாவது தசரதனின் அமைச்சரவை ஆலோசனைகள் மற்றும் விபீடணனின் சரணாகதிப் படலத்தில் நிகழும் விவாதங்கள், ஒரு நாட்டின் முடிவெடுக்கும் அதிகாரம் ஒருவரிடம் மட்டும் (Dictatorship) இருக்க வேண்டுமா அல்லது ஆலோசனைக் குழுவிடம் இருக்க வேண்டுமா என்ற

**தொடர்ச்சி: பக்கம் 14**

 © 2026 இலக்கு இணையம்

# நீலகாமம்: ஒரு குடும்பத்தின் வலியிலிருந்து உருவான எழுச்சி




மருதன் ராம்

இரத்தினபுரி – கஹவத்தை நீலகாமம் பெருந்தோட்டத்தில் தொழிலாளர் ஒருவர் அமைத்த தற்காலிக குடியிருப்பு மீது நடத்தப்பட்ட தாக்குதல், ஒரு தனிப்பட்ட சம்பவமாக ஆரம்பித்திருந்தாலும், அது இன்று முழு மலையக சமூகத்தின் உரிமைப் போராட்டமாக மாறியுள்ளது. கருப்பு ஆடை அணிந்த குண்டர் குழுவொன்று குடியிருப்பை சேதப்படுத்தி, தொழிலாளியை தாக்கிய சம்பவம், பெருந்தோட்ட மக்களின் பாதுகாப்பு, காணி உரிமை, அடிப்படை மரியாதை மற்றும் வாழ்வுரிமை குறித்த கேள்விகளை மீண்டும் தீவிரமாக எழுப்பியுள்ளது.




இந்த சம்பவத்துக்கு எதிராக “நாம் நீலகாமம்” என்ற மக்கள் இயக்கம் உருவாக்கப்பட்டதோடு, ஊடகவியலாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், அரசியல் பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் இணைந்து நீதிக்கான குரலை உயர்த்தின. குறிப்பாக, கொழும்பில் கடந்த 5ஆம் திகதி நடத்தப்பட்ட கவனயீர்ப்பு போராட்டம் மற்றும் அதற்கு வலு சேர்க்கும் வகையில் 3ஆம் திகதி ஹட்டனில் நடைபெற்ற மக்கள் ஆர்ப்பாட்டம், இந்த பிரச்சினையை தேசிய அளவிலான விவாதமாக மாற்றியது. இந்தப் போராட்டம் பாரிய அரசியல் அழுத்தங்களையும் உருவாக்கியுள்ளது.

நீலகாமம் சம்பவம் ஆரம்பத்தில் ஒரு உள்ளூர் பிரச்சினையாகவே கருதப்பட்டது. ஆனால், “நாம் மலையகம்” என்ற அமைப்பு தொடர்ந்து முன்னெடுத்த நடவடிக்கைகள் காரணமாக, அரசாங்கம் மற்றும் அதிகாரிகள் இதை புறக்கணிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. நீலகாமம் பிரகடனம் வெளியிடப்பட்ட பின்னர், சம்பவம் ஊடகங்களில் பரவலாக பேசப்பட்டது. அதன் பின்னர் அரசியல் தலைவர்கள் நேரடியாக சம்பவ இடத்துக்குச் சென்று மக்களை சந்திக்கத் தொடங்கினர்.

அத்துடன், கொழும்பில் நடைபெற்ற போராட்டத்துக்கு முன்பாகவே பாதிக்கப்பட்ட மக்களை நாடாளுமன்றத்திற்கு அழைத்து சென்று பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கத்தின் பிரதிநிதிகள் முனைந்தனர். இதுவே போராட்டம் அரசியல் மற்றும் நிர்வாக மட்டங்களில் தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதை வெளிப்படுத்தியது. இந்த போராட்டத்தின் முக்கிய அம்சம் என்னவென்றால், இது ஒரே ஒரு குடும்பத்துக்கான நீதிக்கான போராட்டமாக மட்டும் இல்லாமல், ஒட்டுமொத்த மலையக மக்களின் பாதுகாப்பு மற்றும் உரிமைகளுக்கான போராட்டமாக மாற்றப்பட்டது. குறிப்பாக ஹட்டனில் நடைபெற்ற போராட்டத்தில் உரையாற்றிய மலையக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் இராதாகிருஷ்ணன் ராஜாராம், மலையக மக்களுக்கு எதிரான அடக்குமுறைகள் இனி அமைதியாக ஏற்கப்படமாட்டாது என எச்சரித்தார்.

“மலையக மக்களை யாராவது சீண்டினால் அது பெருந்தோட்டம் முழுவதும் உணர்வுகளைத் தட்டியெழுப்பும்,” என்ற அவரது கருத்து, போராட்டத்தின் உணர்ச்சி மற்றும் அரசியல் திசையை வெளிப்படுத்தியது. இதன் போது எழுப்பப்பட்ட கேள்விகள் மலையக மக்களிடம் நீண்டகாலமாக தேங்கியிருந்த ஏமாற்றம் மற்றும் கோபத்தை பிரதிபலித்திருந்தது.

## நாடாளுமன்றத்திலும் எதிரொலித்த நீலகாமம்

நீலகாமம் மற்றும் பிற பெருந்தோட்டப் பகுதிகளில் இடம்பெற்ற தாக்குதல்கள் குறித்து நாடாளுமன்றத்திலும் கடும் விவாதம் எழுந்தது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, மனோ கணேஷன், நாமல் ராஜபக்ச மற்றும் ஜீவன் தொண்டமான் உள்ளிட்டோர் பெருந்தோட்ட தொழிலாளர்கள் மீது தொடர்ச்சியாக இடம்பெறும் தாக்குதல்களை சுட்டிக் காட்டினர். இதற்கு பதிலளித்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, “தாக்குதல்களை ஒரு போதும் அனுமதிக்க முடியாது. சட்டம் அனைவருக்கும் சமம்” என்று தெரிவித்தார். நீலகாமம் சம்பவம் தொடர்பில் 11 பாதுகாப்பு அதிகாரிகள் கைது செய்யப்பட்டதாகவும், வழக்கு விசாரணை நடைபெற்று வருவதாகவும் அவர் அறிவித்தார்.

இதன் மூலம், பெருந்தோட்ட மக்களின் பிரச்சினை தேசிய அரசியல் அரங்கில் விவாதிக்கப்படும் நிலைக்கு வந்துள்ளது. இந்த போராட்டத்தின் முக்கிய கோரிக்கைகளில் ஒன்று, பெருந்தோட்டப் பகுதிகளில் செயல்படும் முன்னாள் இராணுவத்தினரை உள்ளடக்கிய தனியார் பாதுகாப்பு குழுக்களை அகற்ற வேண்டும் என்பதாகும். இந்த குண்டர் குழுக்கள் தொழிலாளர்களிடம் அச்சம் ஏற்படுத்தும் வகையில் செயல்படுகின்றன.



இதனை ஜனாதிபதி செயலகத்திலும் எடுத்துரைத்ததாகவும், 21 நாட்களுக்குள் தீர்வு கிடைக்காவிட்டால் சர்வதேச மட்டத்தில் பிரச்சினையை கொண்டு செல்லத் தயார் எனவும் போராட்ட அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். நீலகாமம் சம்பவம் மற்றும் அதனைத் தொடர்ந்து நடைபெற்ற போராட்டங்கள், மலையக சமூகத்தில் புதிய அரசியல் மற்றும் சமூக எழுச்சிக்கான அறிகுறியாக பார்க்கப்படுகின்றன. முன்னதாக தனித்தனியாக பேசப் பட்ட பிரச்சினைகள், தற்போது ஒன்றுபட்ட மக்கள் இயக்கமாக மாறியுள்ளன.

ஊடகவியலாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் அரசியல் தரப்புகள் இணைந்து செயற்படத் தொடங்கியிருப்பது குறிப்பிடத்தக்க மாற்றமாகும். இந்த போராட்டங்கள் உடனடி நீதியை மட்டுமல்ல, நீண்டகால பாதுகாப்பு, காணி உரிமை மற்றும் அரசியல் அங்கீகாரம் ஆகியவற்றையும் கோருகின்றன. தேசிய மட்டத்தில் இவ்வாறான போராட்டங்கள் மற்றும் நாடாளுமன்றத்தில் அழுத்தம் உள்ளிட்ட பல விதமான எதிர்ப்புகள் இடம் பெறுகின்ற போதிலும் இந்தப் போராட்டங்கள் மீதான மலையக மக்களின் ஈர்ப்பு குறித்த கேள்வியும் வெகுவாக எழுந்துள்ளது.

மலையக சமூகத்துக்கான போராட்டம் இடம் பெற்ற அதே நாளில் இந்தியாவின் தமிழகத்தில் உள்ள நடிகர் விஜய் தலைமையிலான தமிழக வெற்றி கழகம் 108 ஆசனங்களை பெற்று வெற்றி பெற்றதை கொண்டாடும் வகையில் கொண்டாட்ட நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன. இனிப்புகள் வழங்கப்பட்டு கேளிக்கை வெடிகளுடன் இடம்பெற்ற இவ்வாறான கொண்டாட்டங்கள் மலையக மக்களின் உரிமைக்கான போராட்டங்களில் மறைமுகமாக தாக்கத்தையும் ஏற்படுத்துகின்றன.

எது எவ்வாறாயினும் நீலகாமம் சம்பவம் என்பது ஒரு குடியிருப்பு சேதப்படுத்தப்பட்ட சம்பவம் மட்டுமல்லாது. அது மலையக மக்களின் பல தசாப்தங்களாகக் குவிந்து கிடக்கும் வேதனை, பாதுகாப்பின்மை, காணியற்ற வாழ்க்கை, அரசியல் புறக்கணிப்புக்கான போராட்டத்தின் வெளிப்பாடாக மாறியுள்ளது. இந்த நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பிய பெருந்தோட்ட தொழிலாளர் சமூகம் இன்னும் அடிப்படை உரிமைகளுக்காக வீதிகளில் இறங்கி குரல் கொடுக்க வேண்டிய நிலை தொடர்வது, இலங்கையின் ஜனநாயக அமைப்புக்கு ஒரு பெரும் சவாலாகும்.




இந்த போராட்டத்தின் முக்கிய வெற்றி என்னவென்றால், நீண்டகாலமாக கவனிக்கப்படாமல் இருந்த ஒரு பிரச்சினையை தேசிய விவாதமாக மாற்றியிருப்பதே ஆகும். நீலகாமம் முதல் ஹட்டன், அங்கிருந்து கொழும்பு மற்றும் நாடாளுமன்றம் வரை இந்த விவகாரம் பேசப்பட்டது. அரசாங்கம் பதிலளிக்க வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. அமைச்சர்கள், அதிகாரிகள், அரசியல் தலைவர்கள் மற்றும் பாதுகாப்பு தரப்புகள் விளக்கம் அளிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இதுவே ஜனநாயக போராட்டத்தின் உண்மையான சக்தியாகும். மேலும், இந்த போராட்டங்கள் மலையக சமூகத்தில் புதிய ஒற்றுமை உணர்வை உருவாக்கியுள்ளது. அரசியல் கட்சிகள், ஊடகவியலாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், தொழிற்சங்கங்கள், கலைஞர்கள் மற்றும் பொதுமக்கள் ஒரே இடத்தில் நிற்பது, மலையக அரசியலில் புதிய அத்தியாயத்தை தொடங்கியிருக்கிறது.

“நாம் தனியாக இல்லை” என்ற நம்பிக்கையை இது மக்களிடம் உருவாக்கியுள்ளது. அதேசமயம், இந்த போராட்டம் ஒரு முக்கியமான எச்சரிக்கையையும் முன்வைக்கிறது. நீதி மறுக்கப்பட்டு, அடக்குமுறைகள் தொடர்ந்தால், மக்களிடையே ஏமாற்றமும் கோபமும் அதிகரிக்கும். ஆகவே, இந்த தருணத்தை அரசாங்கமும் பெருந்தோட்ட நிறுவனங்களும் சாதாரண எதிர்ப்பாக அல்லாது, ஒரு சமூகத்தின் வாழ்வுரிமை கோரிக்கையாக புரிந்துகொள்ள வேண்டும். பெருந்தோட்ட பகுதிகளில் செயற்படும் தனியார் பாதுகாப்பு குழுக்கள் குறித்து சுயாதீன விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

தாக்குதல்களுக்கு பொறுப்பானவர்கள் அரசியல் அல்லது பொருளாதார செல்வாக்கை பொருட்படுத்தாமல் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். மேலும், பெருந்தோட்ட மக்களின் காணி உரிமை, வீட்டு வசதி, பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளுக்கு நீடித்த தீர்வுகள் வழங்கப்பட வேண்டும். அமைதியான ஜனநாயக போராட்டங்கள் இன்னும் இந்த நாட்டில் மாற்றத்தை உருவாக்க முடியும் என்பதை நீலகாமம் நிரூபித்துள்ளது. அந்த வகையில் இந்த சம்பவம் எதிர்கால உரிமைப் போராட்டங்களின் ஒரு தொடக்கக் குரலாக வரலாற்றில் நினைவுகூரப்படும்.

• • •


பாராளுமன்றக் கண்காட்சி
உண்மைகள் உறங்காது
தமிழ் இனப்படுகொலை 1948 – 2026
13 வைகாசி 2026 ; காலை 11:00 தொடக்கம் மாலை 4:00
Australian Parliment House, Canbera ACT 2600
Dining Room - 1
கண்காட்சி பற்றி
1948 முதல் இன்று வரை இலங்கை அரசால் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் இனப்படுகொலையின் உண்மைகளை இந்தக் கண்காட்சி பதிவு செய்கிறது.
வரலாற்று காலவரிசைகள், ஆதாரங்கள் மற்றும் மக்களின் வாழ்வனுபவங்களின் மூலம், பல தசாப்தங்களாக தொடர்ந்து நடைபெற்று வரும் அமைப்புசார்ந்த வன்முறை, கட்டாய இடம்பெயர்வு மற்றும் அநீதிகளை இது வெளிச்சத்திற்கு கொண்டு வருகிறது.
நிகழ்ச்சி நிரல்
• நாள் முழுவதும் கண்காட்சி திறந்திருக்கும்
• இடைவேளைகளில் பேச்சாளர்களின் உரையாடல்கள்
கலந்து கொள்வதன் அவசியம்
• தமிழ் இனப்படுகொலையின் வரலாற்றை அறிந்து கொள்
• சமூகத்தின் குரல்களை கேட்க
• மனித உரிமை ஆதரவாளர்கள் மற்றும் கொள்கை வடிவமைப்பாளர்களுடன் கலந்துரையாட
• நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்காக ஒன்றிணைய
தமிழ் ஏதிலிகள் கழகம்
Tamil Refugee Council
KALYANI INPAKUMAR
TRC NSW COORDINATOR
0425 306 933



# அழிவின் மூலம் அதிகாரம் என்பதற்கு பதிலாக

# சீர்குலைப்பின் மூலம் அதிகாரம்

போர் நிறுத்தத்திற்குள் பேச்சுவார்த்தை, போர் நிறுத்தத்திற்குள் தாக்குதல் என்ற புதிய உதியுடன் ஈரான் அமெரிக்க போரின் போர் நிறுத்தம் பயணிக்கின்றது. ஈரானுடனான 40 நாட்கள் போரை முடிவுக்கு கொண்டுவர பாக்கிஸ்தானின் உதவியை நாடிய அமெரிக்கா தனது தோல்வியை ஏற்றுக்கொள்ள மறுப்பதுடன், அமெரிக்காவின் தோல்வி என்பது அந்த பிராந்தியத்தில் இஸ்ரேலின் தோல்வியாகவே முடியும் என்பதால் போரில் இருந்து வெளியேற முடியாத நிலையில் தவித்துக் கொண்டிருக்கின்றது.



எனவே தான் போர் நிறுத்தம் அறிவித்த கையுடன் ஈரான் மீதான கடல் முற்றுகையை கொண்டுவந்திருந்தது. கடல் முற்றுகை மூலம் ஈரானின் பொருளாதாரத்தை முடக்கி ஈரனை தனது நிபந்தனைகளுக்கு இணங்க வைப்பது ஒரு உத்தியாக உள்ள அதேசமயம், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஏனைய தனது ஆதரவு நாடுகளை அணிதிரட்டி ஹார்மூஸ் நீரிணையை கையகப்படுத்துவது மறு உத்தி.

இந்த நடவடிக்கையில் பல ஈரானின் கப்பல் கள் திரும்பி அனுப்பப்பட்டன இரண்டு கப்பல்கள் அமெரிக்காவின் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன இரண்டு கப்பல்கள் அமெரிக்க கடற்படை மற்றும் வான்படையினரால் தாக்கப்பட்டிருந்தன. பதிலடியாக ஈரானும் இரண்டு கப்பல்களை கைப்பற்றியிருந்தது. 3 கப்பல்கள் மீது தாக்கு தல்களை நடத்தியிருந்தது. ஆனாலும் மேற்குலக ஊடகங்களின் படி ஈரானின் 60 விகிதமான எண்ணெய்க் கப்பல்கள் வர்த்தக நடைவடிக்கையில் ஈடுபடுவதை அமெரிக்காவின் முற்றுகையால் தடுக்க முடியவில்லை.

Strait of Hormuz shipping lanes




இந்த நிலையில் தான் சுதந்திர நடவடிக்கை என்ற ஒன்றை அமெரிக்க அதிபர் ட்றம்ப் கடந்த 3 ஆம் நாள் அறிவித்திருந்தார். அதாவது அமெரிக்காவின் கடற்படைக் கப்பல்கள் மற்றும் நூற்றுக்கு மேற்பட்ட விமானங்களின் உதவியுடன் ஹார்மூஸில் உள்ள 2,000 கப்பல்களையும், 20,000 பணியாளர்களையும் மீட்கும் நடவடிக்கை அது. ஆனால் 21 மைல்கள் அகலம் கொண்ட ஆழம் குறைந்த கடற்பரப்பில், ஈரானின் 350 கி.மீ நீமமான கரையோர பாதுகாப்புக்களை தாண்டி அதனை செயற்படுத்துவது என்பது கடினமானது.

அமெரிக்காவின் "சுதந்திரத் திட்டத்தை" ஈரான் எவ்வாறு முறியடித்தது? என்பது குறித்து லெபனான் செய்தித்தாள் அல்-அக்பர் தெரிவித்துள்ளதாவது. நெகிழ்வுத்தன்மை, படைகளைப் பரவலாக்குதல், பலதரப்பட்ட அச்சுறுத்தல்கள் மற்றும் எந்தவொரு நேரடி இராணுவத் தலையீட்டின் செலவுகளையும் அதிகரித்தல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு கடற்படை உத்தியை தெஹ்ரான் பின்பற்றியது. இந்தக் கட்டமைப்பிற்குள், கடற்படை மோதலை நிர்வகிப்பதற்கான படைக்கலங்களை தெஹ்ரான் பெற்றது. இந்தச் படைக்கலங்களில் வேகமான மற்றும் இலகுவான படகுகளைப் பயன்படுத்தி "தாக்குதல் நடத்தும்" தந்திரம்.

பாரம்பரியமான கனரகப் போர்க்கப்பல்களைச் சார்ந்திருப்பதற்குப் பதிலாக, அதிவேகத்தில் நகரக்கூடிய மற்றும் வெவ்வேறு திசைகளிலிருந்து ஒரே நேரத்தில் தாக்குதல்களை நடத்தக்கூடிய ஆயுதம் ஏந்திய படகுகளின் ஒரு பரந்த வலையமைப்பை ஈரான் உருவாக்கியது.



அவர் கூறியது போல ஈரானின் படைத்துறை உத்தி ஒருபுறம் இருந்தாலும், சவுதி அரேபியாவும் குவைத்தும் தமது தளங்களை அமெரிக்காவின் சுதந்திர நடவடிக்கையின் தாக்குதல் திட்டங்களுக்கு பயன்படுத்த அனுமதிக்கவில்லை என என்.பி.சி செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. அமெரிக்கத் தரப்பு சவுதி அரேபியாவுடன் பேச்சுக்களை மேற்கொண்டபோதும் அது கைகூடவில்லை. தாக்குதல் விமானங்களுக்கு எரிபொருள் நிரப்புவதற்கு சவுதி மற்றும் குவைத்தின் வான்பரப்புக்கள் இல்லாது தாக்குதல் நடத்தமுடியாது என்பதாலும், ஈரானின் பதில் தாக்குதல்கள் கடுமையாக இருக்கும் என்பதாலும், ஏனைய அமெரிக்க கூட்டணி நாடுகள் ட்றம்பின் திட்டத்தை உதாசீனப்படுத்தியதாலும் ஆரம்பித்த 24 மணி நேரத்தில் அந்த திட்டம் தோல்வியடைந்தது.

அதேசமயம், ஹார்முஸ் ஜலசந்தியில் கப்பல் போக்குவரத்திற்கான சுதந்திரம் குறித்த அமெரிக்க தலைமையில் வளைகுடா நாடுகள் கொண்டுவரவுள்ள ஐ.நா. தீர்மானத்தை ரஷ்யாவும் சீனாவும் வீட்டோ செய்யவிருக்கின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.. அதற்கான அவர்களின் காரணம், போரைத் தொடங்கியதற்காக அமெரிக்காவையும் இஸ்ரேலையும் அந்த வரைவு குற்றம் சாட்டவில்லை என்பதாகும், கடந்த முறை கொண்டுவரப்பட்ட தீர்மானமும் ரஸ்யா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளாவ் வீட்டோ செய்யப்பட்டிருந்தன.

அதாவது அமெரிக்காவின் இராஜதந்திர முயற்சியும் தோல்வியையே சந்தித்து நிற்கின்றது. இந்த நிலையில் தான் கடந்த வியாழக்கிழமை(7) இரவு அமெரிக்காவின் மூன்று அழிப்பான் கப்பல்கள், எரிபொருள் தாங்கி

வேல்ஸில் இருந்து **அருஸ்**

கப்பல்களுக்கு பின்னால் நிலையெடுத்து ஹார்மூஸ் நீரிணையை கடக்க முற்பட்டிருந்தன. அதன் போது இரு தரப்புக்கும் இடையில் கடும் மோதல்கள் வெடித்திருந்தன.

மூன்று அமெரிக்கக் கடற்படைக் கப்பல்கள், பல அடுக்கு பாதுகாப்பு அரண்களின் (எரிபொருள் டேங்கர்கள்) பாதுகாப்பின் கீழ் ஹோர்முஸ் ஜலசந்தியைக் கடந்து செல்ல முயன்றன, ஈரானியர்களும் அதற்குத் தயாராக இருந்தனர். ஈரானியர்கள் அந்தக் கப்பல்களை எதிர்கொண்டனர், ஆனால் பல அடுக்கு பாதுகாப்பு அரண்கள் தோல்வியடைந்ததால், அமெரிக்கா பின்வாங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. தோல்வியுற்ற பின்வாங்கல் என்ற கதையை மாற்றுவதற்காக, அவர்கள் ஈரானியத் துறைமுகங்கள் மற்றும் கப்பல்கள் மீது ஏவுகணைகளை ஏவினர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சண்டை தீவிரமடைந்தபோது, சவூதி அரேபியாவும் குவைத்தும் அமெரிக்க விமானப்படைத் தளங்களுக்கான அனுமதியை துண்டித்தன. ஆறு மணி நேரம் கழித்து, அவை அதை மீண்டும் வழங்கியதாக தெரிவிக்கப்படுகின்றது. வளைகுடா நாடுகள் இந்தப் போரில் இருக்க விரும்பவில்லை என்பதையே இது காட்டுகின்றது. மேலும் வளைகுடாவில் இருந்த அமெரிக்காவின் ஆளுமையின் இழப்பாகவும் இதனை கருதலாம்.

எனினும் ஈரானின் முதல் ஏவுகணை ஏவப்படுவதற்கு முன்பே மத்திய கட்டளை ஒரு தாக்குதல் திட்டத்தைத் தயார் நிலையில் வைத்திருந்தது. கிஷ் மற்றும் பந்தர் அப்பாஸில் உள்ள ஈரானிய துறைமுகங்கள் மீது அமெரிக்கா தாக்குதல்களை நடத்தியது, ஆனால் இது போர் மீண்டும் தொடங்குவதைக் குறிக்கவில்லை என்று வாஷிங்டன் கூறியது. ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள ஃபுஜைரா துறைமுகம் மீது ஈரான் 15 ஏவுகணைகளை ஏவியதற்குப் பதிலடியாகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.



சமீபத்திய நாட்களில், அமெரிக்கப் போர்க்கப்பல்கள் ஓமானின் கடல் பகுதியில் உள்ள ஒரு குறுகிய பாதையைப் பயன்படுத்தி ஹோர்முஸ் வழியாகப் பயணிக்கத் தொடங்கியுள்ளன, இது ஈரானின் ஒட்டுமொத்த உத்திக்கும் அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், இந்தக் கப்பல்கள், ஜலசந்தியைக் கடக்க முயற்சிக்கும் கப்பல்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிக்கும் முயற்சியில் நிலைகளை எடுத்துள்ளன. அமெரிக்காவின் இந்த திட்டத்தை முறியடிக்க வேண்டிய நிலையில் ஈரான் உள்ளது எனவே தான் அது அமெரிக்க அழிப்பான்களை நோக்கி ஏவுகணைகள், ஆளில்லாத

**தொடர்ச்சி: பக்கம் 14**



# ஹோர்முஸ் ஜலசந்தி: ட்ரம்ப் எதிர் கொள்ளும் இராணுவச் சிக்கல்களும் உலகளாவிய பொருளாதார நெருக்கடியும்

பட்ரிசியா மரின்ஸ்
படைத்துறை ஆய்வாளர், பிரேசில்

மே 3 ஆம் தேதி, டொனால்ட் டிரம்ப் தனது சமூக ஊடகத்தில், ஹோர்முஸ் ஜலசந்தி வழியாக கப்பல்களுக்குப் பாதுகாப்பு அளிக்குமாறு அமெரிக்காவிற்கு உத்தரவிட்டதாக அறிவித்தார். சில மணிநேரங்களுக்குப் பிறகு, ஜலசந்தியைக் கடக்க முயன்ற ஒரு அமெரிக்க இராணுவக் கப்பல் மீது இரண்டு ஏவுகணைகளை வீசியதாக ஈரான் அறிவித்தது. இந்தக் கூற்றை அமெரிக்கா மறுத்தது, ஆனால் ஈரானியக் கப்பல்களிடமிருந்து உத்தரவுகளைப் பெற்ற பிறகு இரண்டு போர்க்கப்பல்கள் ஜலசந்தியில் பின்வாங்கின என்பதையும் சில வாரங்களுக்கு முன்பு அவர்கள் மறுத்திருந்தனர்; ஈரானியத் தரப்பிலிருந்து வெளியிடப்பட்ட ஒலிப்பதிவுகள் மூலம் இந்த உண்மை பின்னர் நிரூபிக்கப்பட்டது.



ஜலசந்தி வழியாக கப்பல்களுக்குப் பாதுகாப்பு அளிக்குமாறு அமெரிக்கக் கப்பல்களுக்கு டிரம்ப் உத்தரவிடுவதற்கான தற்போதைய வாய்ப்புகள் என்ன? இது மோசமாக, மிகவும் மோசமாக முடியக்கூடும் என்று நான் கூறுவேன்; இரண்டு சி-130 விமானங்கள் மற்றும் ஹெலிகாப்டர்கள் குறிவைக்கப்பட்டு அழிக்கப்பட்ட நடவடிக்கையை இது எனக்கு நினைவூட்டுகிறது.

ஜலசந்தியை ஒட்டிய ஈரானியக் கடற்கரை சுமார் 350 கி.மீ. நீளத்திற்குப் பரவியுள்ளது, அங்கு ஏவுகணை ஏவுதளங்கள் மற்றும் ட்ரோன்கள் பொருத்தப்பட்ட பதுங்குகுழிகள் மற்றும் குகைகளில் நிலைகள் நிறைந்துள்ளன. கடக்கும் இடத்தில் உள்ள நீரிணையின் அகலம், 35 முதல் 80 கி.மீ வரையிலான ஆழமற்ற நீர்ப்பரப்பாக மாறுபடுகிறது.

அமெரிக்க விமானம் தாங்கித் தாக்குதல் குழுக்களிடம் (CSGs) அந்த நீரிணையில் ஒரு பாதுகாப்புப் பணிக்குத் தேவையான குறிப்பிட்ட கப்பல்கள் கூட இல்லை. தற்போதைய சூழ்நிலையில், அழிப்புக் கப்பல்களை அங்கு அனுப்புவது ஒரு பைத்தியக்காரத்தனமான செயலாகும், மேலும் அது தளபதிகளால் நிராகரிக்கப்படவும் வாய்ப்புள்ளது.

மற்ற ஏவுகணை எதிர்ப்பு அமைப்புகளைப் போலவே, ஆர்லே பர்க்கின் பாதுகாப்பு அமைப்புகளின்




வெற்றி விகிதமும் தூரத்தைப் பெரிதும் சார்ந்துள்ளது. வெறும் சில டஜன் கிலோமீட்டர் தொலைவிலிருந்து ஏவப்படும் எறிகணைகள் இந்த வாய்ப்புகளைக் குறைக்கின்றன. ஏனெனில், கட்டளை மையத்திற்கு இந்த ஏவுகணைகளை ஆய்வு செய்யவும், அவற்றின் நடத்தையைக் கணிக்கவும், மேலும் உறுதியான இடைமறிப்புகளுக்கு வழிவகுக்கும் தரவுத் தளத்தை உருவாக்கவும் குறைவான நேரமே கிடைக்கிறது. சில டஜன் கிலோமீட்டர் தூரத்தில், செயலாக்கத்திற்கான கால அவகாசம் மிகவும் குறுகியதாகி, இடைமறிப்பதற்கான வாய்ப்புகள் பெருமளவில் குறைந்துவிடுகின்றன.

தமிழில்: **ஆர்தீகன்**

நான் மிகத் தெளிவாகக் கூறுகிறேன்: ஆர்லே பர்க்ஸ் விமானங்களைப் பயன்படுத்தி ஜலசந்தியை வலுக்கட்டாயமாகத் திறப்பது, பேரழிவுக்கான பெரும் அபாயத்தைக் கொண்டிருக்கும். இந்த நடவடிக்கையுடன் பல்வேறு ஆயுதம் ஏந்திய ட்ரோன்களும் உளவு விமானங்களும் உடன் வந்தாலும் கூட, அபாயங்கள் மிக அதிகமாகவே இருக்கும்.

ட்ரோன்கள் (நீருக்கடியில், மேற்பரப்பில் மற்றும் வான்வழி) முதல் அதிவேகப் படகுகள், குட்டி நீர்மூழ்கிக் கப்பல்கள், மற்றும் ஜலசந்தி நெடுகிலும் சிதறிக்கிடக்கும் டஜன் கணக்கான கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகள் வரை அச்சுறுத்தல்கள் உள்ளன.

செங்கடலில் ஹூதிகளுக்கு எதிராகப் பணிக் குழுவை அனுப்பியபோது, ஹோர்முஸில் இருந்ததை விட மிகச் சிறிய அச்சுறுத்தலை எதிர்கொண்ட யுஎஸ்எஸ் கார்னி மாலுமி ஜோசப் "பாப்பி" க்ரிபோவ்ஸ்கி, அந்தப் போரை திகிலூட்டுவதாக விவரித்தார். அவர் குறிப்பிடுகையில்: "நான் திகிலடையவில்லை என்று சொன்னால் அது பொய்யாக இருக்கும். இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு கடற்படை கண்ட மிக உண்மையான போர் இதுதான்.

மாலுமிகள் மிகுந்த பீதியை எதிர்கொண்டதாகவும், கடுமையான உணர்ச்சி மற்றும் உடல் சோர்வைச் சமாளித்துக்கொண்டே, வரும் ஏவுகணைகளுக்கு எதிர் வினையாற்ற சில வினாடிகள் மட்டுமே இருந்ததாகவும் அவர் வலியுறுத்தினார். நீரிணையை மீண்டும் திறப்பதற்காகக் கப்பல்களை அனுப்புவதை, அதன் தாக்கம் குறித்த அறிக்கைகளைக் கொண்டு அரசியல்மயமாக்க முடியாது. அதற்கு உண்மையாகவே போதுமான வழிமுறைகள் இல்லை. மேலும், கணிசமான உயிரிழப்புகள் ஏற்படாமலும், சில வாரங்களுக்கு முன்பு நாம் கண்ட முழு அளவிலான போர் மீண்டும் தொடராமலும், அதை இப்போதைக்குச் செயல்படுத்த இயலாது.

அமெரிக்கக் கடற்படையின் ஒட்டுமொத்த இராணுவ அமைப்பைக் கருத்தில் கொண்டால், இப்பகுதியில் 700-800 டோமஹாக் ரக ஏவுகணைகளுக்கு மேல் இல்லை. அவற்றில் ஒரு சிறு பகுதி மட்டுமே கப்பல்களை அழிக்கும் திறன் கொண்டவை. ஈரானியக் கப்பல்களுக்கு எதிரான ஏறக்குறைய அனைத்துப் போர்களும் ட்ரோன்கள் மூலமாகவே நடத்தப்பட வேண்டும். இந்த ட்ரோன்கள் அத்தகைய பணிகளில் திறமையானவையாக இருந்தாலும், போரின் கடந்த சில வாரங்களில் இழப்பு விகிதம் கணிசமாக அதிகரித்துள்ளது.



ஈரான் இந்த பலவீனத்தை நன்கு அறிந்திருக்கிறது. மேலும், தன்னிடம் குறைந்தது 1,500 அதிவேகப் படகுகள் இருந்தபோதிலும், தொடர்ந்து சில டஜன் அதிவேகப் படகுகளை அந்த நீரிணையில் அனுப்புகிறது. ஹோர்முஸ் நீரிணையைத் திறக்கக் கட்டாயப்படுத்துவதற்கான ட்ரம்பின் வழிகள் குறைவாகவே உள்ளன,

அதே நேரத்தில் அவர் மீதான அழுத்தமும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. சில நாட்களுக்கு முன்பு, எந்தவொரு ஈரானியக் கப்பலும் முற்றுகையைத் தாண்டிச் செல்லாது என்று அவர் கூறினார். ஆனால், லாயிட்ஸ் மற்றும் வோர்டெக்ஸாவின் கண்காணிப்பின்படி, சமீபத்திய வாரங்களில் 25 முதல் 35 ஈரானியக் கப்பல்கள் முற்றுகையை மீறிச் சென்றுள்ளன. மேலும், ஈரான் தனது எண்ணெயைச் சேமித்து வைக்க இடமில்லாமல் போவதற்கு சுமார் 72 மணி நேரமே உள்ளது என்றும் சில நாட்களுக்கு முன்பு டிரம்ப்

தொடர்ச்சி: பக்கம் 15

## அமெரிக்கா தான் ... தொடர்ச்சி...

தாக்குதல் விமானங்கள் மற்றும் அதிவேக விரைவுப் படகுகள் மூலம் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

மூன்று அமெரிக்கப் போர்க்கப்பல்கள் சேதமடைந்து ஓமான் கடலை நோக்கித் தப்பி ஓட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதாக ஈரானின் ஐ.ஆர்.ஜி.சி கடற்படை, கூறிய அதே பகுதியில், ஓமானின் முசந்தம் மாகாணத்திற்கு அப்பால் உள்ள ஹோர்முஸ் ஜலசந்தியில் தீ பற்றிக்கொண்டதை நாசா செயற்கைக்கோள் தரவுகள் காட்டுகின்றன. எனினும் இந்த கட்டுரை எழுதப்படும் போது அது யாருடைய கப்பல் என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை.

அமெரிக்க தாக்குதலின் பொருள் போர் நிறுத்தம் முடிந்துவிட்டதா என்று ஏபிசி பத்திரிகையாளர் அமெரிக்க அதிபரிடம் கேட்டபோது, அவர் 'இல்லை, இல்லை, போர் நிறுத்தம் இன்னும் அமுலில் உள்ளது. அது இன்னும் நடைமுறையில் இருக்கிறது. ஈரானிய இலக்குகள் மீதான பதிலடித் தாக்குதல்கள் ஒரு 'நட்புத் தாக்குதல்' மட்டுமே என்று தெரிவித்தார் என்று அந்த ஊடகவியலாளர் தெரிவித்துள்ளார்.

நட்பாக ஏவுகணைத் தாக்குதல் நடத்தலாம் என்பது தற்போது உலகிற்கு புதிய தகவல், அதாவது ஈரான் தனது பலத்தை தக்கவைத்துள்ளது அதனை உடைப்பதற்கு உலக வல்லரசால் கூட முடியவில்லை. மீண்டும் ஒரு போர் ஏற்பட்டால் அதனை அமெரிக்காவால் எதிர்கொள்ள முடியாது என்பதையே இது காட்டுகின்றது.

உலகம் 'அழிவின் மூலம் அதிகாரம்' என்பதற்குப் பதிலாக 'சீர்குலைப்பின் மூலம் அதிகாரம்' என்ற புதிய கட்டத்திற்குள் நுழைந்துள்ளது. ட்ரோன்கள் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் போன்ற மலிவான வழிகளைப் பயன்படுத்தி, சிறிய சக்திகள் இப்போது வல்லரசுகளைச் சீர்குலைக்கும். இந்த இக்கட்டான சூழ்நிலையிலிருந்து எப்படி மீள்வது என்று டிரம்ப் நிர்வாகத்திற்கு தெரியவில்லை, தடைகளைத் தளர்த்துவதற்கும் ஈரானிய ஆட்சியைப் பாதுகாப்பதற்கும் ஈடாக, ஈரான் தனது அணுசக்தித் திட்டத்தின் ஒரு பகுதியைத் தக்கவைத்துக் கொள்ள அனுமதிக்கும் ஒரு போர்நிறுத்தமே வாஷிங்டனுக்கான சிறந்த சூழ்நிலை என்று அமெரிக்க எழுத்தாளர் ஃப்ரீட்மேன் தெரிவித்த கருத்தே இங்கு பொருத்தமானது.

• • •

## ஐக்கிய அரபு அமீரகம் ... தொடர்ச்சி...

முக்கிய ஆர்வம் கொண்ட நாடு அல்ல. ஐக்கிய அரபு அமீரகமும் கணிசமான உபரி உற்பத்தித் திறனைக் கொண்டுள்ளது, அதை 2027-ஆம் ஆண்டுக்குள் ஒரு நாளைக்கு 5 மில்லியன் பீப்பாய்கள் என்ற அளவில் விரிவாக்க இலக்கு வைத்துள்ளது. ஒபெக்கின் கூட்டு கட்டமைப்பிற்குள், அந்தத் திறன் பயன்படுத்தப்படாமல் முடங்கிக் கிடக்கிறது.

அதற்கு வெளியே, ஐக்கிய அரபு அமீரகம் உண்மையில் அதைப் பயன்படுத்த முடியும். பிறகு, ஈரான் காரணியும் உள்ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை(3) வளைகுடாவில் எண்ணெய் கப்பல்கள் மற்றும் எரிசக்தி உள்கட்டமைப்புகளைத் தாக்கிய போதிலும், ஈரான் ஒரு நல்ல நிலையில் ஒபெக் உறுப்பினராக நீடிக்கிறது என்று தூதர் யூசெஃப் அல் ஒதைபாசுட்டிக்காட்டுகிறார்.

அப்படிச் செய்யும் ஒரு நாட்டுடன் ஒரு கூட்டமைப்பைப் பகிர்ந்துகொள்வது கடினம். அவரது தந்தை 6 முறை ஒபெக் தலைவராக இருந்தவர். இந்த முடிவுக்குப் பிறகு, கலவையான உணர்வுகளை எதிர்பார்த்து தூதர் அவரைத் தொலைபேசியில் அழைத்தபோது, இதுதான் ஆரம்பம் முதலே திட்டம் என்று அவரது தந்தை அவரிடம் கூறினார். எண்ணெய் வருவாய் என்பது எப்போதும் ஒரு இலக்கை அடைவதற்கான வழிமுறையே தவிர, அதுவே இறுதி இலக்கு அல்லஎனதெரிவித்துள்ளார்.

## அரசியல் மயமான மே தின ... தொடர்ச்சி...

சிறைக்கு அனுப்புவோம் என்ற சவால்கள், இன ரீதியான துருவமுனைப்புகள் மற்றும் அதிகாரப் பசி என்பன உழைக்கும் வர்க்கத்தின் உண்மையான வலிகளை மறைத்து விட்டன.

மேதினத்தின் அடிப்படை நோக்கமான 'தொழிலாளர் வர்க்க ஒற்றுமை' என்பது சிதைக்கப்பட்டு, கட்சி ரீதியாகவும், இன ரீதியாகவும் தொழிலாளர்கள் பிரிக்கப்பட்டிருப்பது இலங்கையின் எதிர்காலத் தொழிற்சங்கப் போராட்டங்களுக்கு ஆரோக்கியமானதல்ல.

ஆட்சியாளர்கள் மாறினாலும், உழைக்கும் மக்களின் பிரச்சினைகள் 'குழுக்கள்' மற்றும் 'ஆணைக்குழுக்களுக்குள்' முடக்கப்படுவது இந்த மேதினத்திலும் கசப்பான உண்மையாகவே நீடிக்கிறது.

• • •







## அதிகாரத்தின் பின்னால்... தொடர்ச்சி...

சமகால ஜனநாயகப் பண்பை விவாதிக்கின்றன.

2) "அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்" என்பது சிலப்பதிகாரம். ஆனாலும், கம்பர் வாலி வதை படலத்தில் வாலி கேட்கும் கேள்விகள் மூலம் "வலிமையானவன் வகுப்பதே சட்டமா?" என்ற அதிகார அரசியலின் தார்மீகச் சிக்கலை வெளிச்சமிட்டுக் காட்டுகிறார்.

3) கோசல நாட்டை வர்ணிக்கும்போது, "கல்லாமை இல்லையெனில் அறியாமை இல்லை, வறுமை இல்லையெனில் ஈகை இல்லை" என்பான் கம்பன். இது ஒரு நாட்டின் பொருளாதாரம் சமமாகப் பகிரப்படும் போது (Equal distribution of wealth), அங்கு வறுமையே இருக்காது என்ற சமதர்ம (Socialist) சிந்தனையை முன் வைக்கிறது.

4) கம்பன் ஒரு மன்னன் வரி வசூலிப்பதை "பூவில் இருந்து வண்டு தேன் எடுப்பது போல" இருக்க வேண்டும் என்பான். ஆனால் தற்கால வரி விதிப்பு' (Optimized Taxation) அதிகமானது. இதனால் எழும் மக்களின் வாழ்க்கை சுமை பற்றி விவாதிக்க முடியும்.

5) அனுமன் மற்றும் அங்கதனின் தூதுப் படலங்கள், நவீனகால சர்வதேச கொள்கை (Foreign Policy) மற்றும் பேச்சுவார்த்தை உத்திகளுக்கு (Negotiation Skills) மிகச்சிறந்த பாடங்களாகும்.

ஆனால், தமிழ் மொழி பேராசிரியர்கள் நகைச்சுவையாகவும், பழமைவாத கருத்துக்களையும் முன்வைத்து, அரங்கில் இருப்பவர் சிரிப்பதற்காக மட்டும் பேசுகின்றனர். சிந்தனைக்காக அல்ல.

ஆகவே, அர்த்தமற்ற பட்டிமன்றங்களும் உரைகளுமே, கம்பன் விழாவில் விஞ்சிக் கிடக்கின்றன.

**குறிப்புகள்:**

(A) தமிழ்நாட்டுக் கம்பன் கழகங்கள் மற்றும் தமிழ்நாடு அரசு வழங்கும் கம்பன் விருதுகள், முதன்மையாக தமிழ் மொழிப் புலமை சார்ந்தவர்களுக்கும், இலக்கிய ஆய்வாளர்களுக்கும் மாத்திரமே வழங்கப்படுகின்றன.

இருப்பினும், அரசியல் பின்புலம் கொண்டவர்கள் இலக்கியத்தில் குறிப்பிடத்தக்க பங்களிப்பு செய்திருந்தால், அவர்கள் கௌரவிக்கப்படுவர்.

• • •

## இஸ்ரேலின் அணு... தொடர்ச்சி...

உட்படுத்த வேண்டும் என்று அமெரிக்காவிடம் அந்தக் குழு கோரிக்கை விடுத்துள்ளது. இல்லையெனில், ஈரானின் அணுசக்தித் திட்டம் மற்றும் சவூதியின் அணுசக்தி லட்சியங்கள் உட்பட, "மத்திய கிழக்கிற்கான ஒரு சீரான அணு ஆயுதப் பரவல் தடுப்புக் கொள்கை" சாத்தியமற்றதாகிவிடும் என்றும் அது மேலும் கூறியுள்ளது.

## இராணுவ நடவடிக்கையை... தொடர்ச்சி...

கேபிள்கள் மற்றும் மைக்ரோசிப்கள் உள்ளிட்ட இரட்டைப் பயன்பாட்டு உதிரி பாகங்களை, பெரும்பாலும் அமெரிக்கத் தடைகளை மீறி, ஈரான் மற்றும் ரஷ்யாவிற்கு வெளிப்படையாக ஏற்றுமதி செய்கின்றன.

சியாமென் விக்டரி டெக்னாலஜி என்ற ஒரு நிறுவனம், சமீபத்திய பிராந்தியப் போர்களில் பயன்படுத்தப்பட்ட ஈரானிய ஷாஹெட்-136 தாக்குதல் ட்ரோன்களுடன் தொடர்புடைய, ஜெர்மன் வடிவமைப்பிலான L550 ட்ரோன்களுக்கான இயந்திரங்களை விளம்பரப்படுத்தியது. ட்ரோன்கள், உலகளாவிய விநியோகச் சங்கிலிகள் மூலம் எளிதாகக் கொண்டு செல்லப்படும் சாதாரண வணிகப் பாகங்களைச் சார்ந்து இருப்பதால், இந்த வர்த்தகத்தை நிறுத்துவது கடினம் என்று அமெரிக்க அதிகாரிகள் கூறுகின்றனர்.

## இனப்படுகொலை நாட்க... தொடர்ச்சி...

பண்பாடுமாகும்.

நாம் வாழ்கிற இன்றைய உலகில், நாம் வாழ்கிற நாட்டில் திட்டமிட்டு நினைவுகளை மறைக்கவும் மாற்றவும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இப்படியான சூழலில் முள்ளிவாய்க்கால் கஞ்சி போன்ற சின்னங்கள் ஒருபோதும் நினைவுகளை அழிக்க முடியாத நிலைக்கு இட்டுச்செல்கின்றன. உண்மையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி என்பது ஒரு துயரத்தின் இறுதி உணவாக மாத்திரமின்றி அது மனித நேயத்தின், பகிர்வின், உயிர்ப்போராட்டத்தின் பேரடையாளமாகும். அது கடந்த காலத்தை நினைவுகூரச் செய்வதோடு மட்டுமல்லாமல், எதிர்காலத்தில் இத்தகைய நிகழ்வுகள் மீண்டும் நடைபெறாத உலகை நாம் படைக்க வேண்டும் என்ற பொறுப்பையும் உலகிற்கு நினைவூட்டுகிறது. முள்ளிவாய்க்காலின் ஒரு கிண்ண கஞ்சியில், இனப்படுகொலையின் இலட்சம் கதைகள் உண்டு. அவற்றை நாம் மறப்பது அறமல்ல, பண்பாடல்ல, மனித நேயமும் மாண்புமல்ல.

• • •

## 2.5மில்லியன் டொலர்கள் ... தொடர்ச்சி...

தண்டிக்கப்பட்டு, மத்திய வங்கியின் ஆளுநர் அல்லது நாணயச் சபை உறுப்பினர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருப்பது ஏன்? என்ற கேள்விக்கு அரச தரப்பில் பதிலளிப்பதற்கு யாருமில்லை.

நிதியமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, இந்த இழப்புக்கள் மக்களின் தலையில் கட்டப்படாது எனக் கூறியிருந்தாலும், அரசாங்கம் எதனூடாக இந்த இழப்பை ஈடு செய்யும்? இறுதியில் மக்களின் வரிப்பணம் மற்றும் பொது நிதியே இதற்குப் பயன் படுத்தப்படும். அது மறைமுகமாக ஒவ்வொரு குடிமகனின் தலையிலும் சுமையாகவே இறங்கும் என்பதை தவிர்க்க முடியாது.

மேலும் திறைசேரி செயலாளராக ஹர்ஷன சூரியப்பெரும நியமிக்கப்பட்ட போதே, அதுவொரு அரசியல் நியமனம் என்ற விமர்சனங்கள் எழுந்தன. ஒரு தேசத்தின் திறைசேரி என்பது அதன் முதுகெலும்பு. அங்கே நியமிக்கப்படுபவர்கள் அரசியல் விசுவாசத்தை விடவும், நிதி முகாமைத்துவத்தில் ஆழ்ந்த அனுபவமும், தொழில்நுட்ப அறிவும் கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

கடந்த காலங்களில் ரணில் விக்கிரமசிங்க தனது நண்பரான அர்ஜுன மகேந்திரனை மத்திய வங்கி ஆளுநராக நியமித்ததால் ஏற்பட்ட பிணைமுறி மோசடி எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தியது என்பதை மறக்கவில்லை. அதற்காக கோசம் எழுப்பியவர்கள் தான் ஆட்சியிலும் உள்ளார்கள். ஆனால் இதுவரையில் அந்த இழப்பை ஈடு செய்வதற்கு எந்த நடவடிக்கைகளையும் அவர்களால் எடுக்க முடிந்திருக்கவில்லை.

அவ்வாறான நிலையில் அநுர அரசாங்கம் இந்த மோசடியை வெறும் ‘ஹக்கிங்’ சம்பவமாகச் சித்தரிக்க முயலாமல், இதற்கான முறையான தடயவியல் ஆய்வை (Forensic Analysis) சர்வதேச நிறுவனங்களின் உதவியுடன் மேற்கொள்ள வேண்டும். லாசரஸ் போன்ற குழுக்கள் ஊடுருவியிருந்தால், அவை மின்னஞ்சல் மட்டத்தில் மட்டும் நின்றிருக்காது. திணைக்களத்தின் உள்ளகக் கணினி கட்டமைப்பையே அவை மாற்றியமைத் திருக்க வாய்ப்புள்ளது. அதுபற்றிய சிந்தனைகள், தொழில் நுட்ப அறிவு அதிகாரிகளுக்கு காணப்படுகின்றதா என்பதே பெருங்கேள்வியாகவுள்ளது.

இந்நிலையில் இந்த மோசடியால் ஏற்பட்ட 2.5 மில்லியன் என்பது வெறும் பண இழப்பு அல்ல. இந்த தொகையானது பல நிபந்தனைகளை விதித்து சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்கிய தவணைக்கடனுக்கு ஏறத்தாழ சமாந்தரமானது.

கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் தரமற்ற சீன உரத்திற்காக 6 மில்லியன் டொலர்களைத் தாரை வார்த்தது போன்றதொரு நிலையே மீண்டும் ஏற்பட்டுள்ளது. அன்று சீன நிறுவனம் மிரட்டிப் பணத்தைப் பறித்தது, இன்று இணையவழியில் மர்மக் கும்பல் மின்னஞ்சல் மூலம் பணத்தைச் சுருட்டியுள்ளது. இரண்டிலும் பலிக்கடாக்களாக இருப்பது வரிப்பணம் செலுத்தும் சாதாரண பொதுமக்களே. அரசாங்கம் இந்த விவகாரத்தில் வெளிப்படைத்தன்மையைக் கடைப்பிடிக்க வேண்டும். பணியிடை நீக்கம் செய்யப்பட்ட அதிகாரிகளுடன் விசாரணை நின்றுவிடக் கூடாது. 21 பேரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக கூறி காலத்தைக் கடத்திவிடக்கூடாது.

இந்த மோசடியின் பின்னணியில் உள்ள ‘பெரிய தலைகள்’ யார்? இந்த நிதி எங்கே பரிமாற்றம் செய்யப் பட்டது? சர்வதேசப் பொலிஸாரின் உதவியின் விளைவு என்ன? மீளப்பெறுவதற்கான சாதக நிலைமைகள் எவ்வாறுள்ளன? போன்ற கேள்விகளுக்கு பொதுவெளியில் பதிலளிக்க வேண்டும்.

விசாரணைகள் நடைபெறுகின்றன. இரகசியத் தன்மை பேணப்பட வெண்டுமென அரச பொதுநிதிக்குழு வில் முன்னிலையாகிய திறைசேரி செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும கூறுவதை தொடர்ச்சியாக ஆளும் தரப்பினரும் கூறி காலத்தைக் கடத்திக்கொண்டிருக்க முடியாது.

தற்போதைய நிலையிலேயே ‘மாற்றத்துக்காக’ வாக்களித்த மக்கள், மீண்டும் ‘ஏமாற்றத்தையே’ பரிசாகப் பெற்றுக்கொண்டுள்ளார்கள். அவ்வாறான நிலையில் நிகழ்ந்தேறியிருக்கும் மோசடி நாட்டின் நிதி இறையாண்மை மற்றும் பொருளாதாரப் பாதுகாப்பின் மரண ஓலமாக இருக்கையில் மீள நிகழாமையை உறுதிப்படுத்துவது யார் கைகளில் உள்ளது.

• • •







## பாதிக்கப்பட்ட வணிக ... தொடர்ச்சி...

“மேற்கு ஆசிய மோதலால் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSME) மற்றும் விமானத் துறைகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைச் சமாளிக்க இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது,” என்று மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறினார்.

இந்தத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடன் களுக்கு, அடுத்த ஆண்டு மார்ச் 31 வரை இந்தத் திட்டம் பொருந்தும்.

அதிகரித்த ஜெட் எரிபொருள் விலை மற்றும் நெருக்கடியைச் சந்திக்கும் விமானத் துறைக்கான கடன்கள், இரண்டு வருட தற்காலிகத் தடையுடன் சேர்த்து, ஏழு வருட காலத்திற்கு வழங்கப்படும். வணிகங்களுக்கான கடன்கள், ஒரு வருட தற்காலிகத் தடையுடன் சேர்த்து, ஐந்து வருடங்களுக்கு வழங்கப்படும்.

மத்திய கிழக்கு மோதலால் தூண்டப்பட்ட நெருக் கடிக்கு மத்தியில் வேலைகளைப் பாதுகாப்பதுடன், செயல்பாடுகளையும் விநியோகச் சங்கிலிகளையும் பராமரிக்க உதவுவதே இதன் நோக்கமாகும்.

பிப்ரவரி 28 முதல் ஏப்ரல் 24 வரை இந்திய விமான நிறுவனங்களால் இயக்கப்படும் 15,400-க்கும் மேற்பட்ட விமானங்கள் ரத்து செய்யப்பட்டன.

## ஹோர்முஸ் ஜலசந்தி: ... தொடர்ச்சி...

கூறினார்.

உண்மையில், ஈரானுக்கு இன்னும் குறைந்தது 30-40 நாட்கள் உள்ளன. ஈரான் கிட்டத்தட்ட எதையும் ஏற்றுமதி செய்யாத நிலையில், சீனக் கடன்கள் குறுகிய காலத்தில் இந்த இழப்புகளில் பெரும் பகுதியை ஈடுசெய்யும் திறன் கொண்டவை, இது ஈரானுக்கு மீள்திறனை அளிக்கிறது. முன்பு, அமெரிக்கக் கடற்படை இரண்டு கப்பல்களை நீர்வழிப்பாதை வழியாகப் பாதுகாப்பாக அழைத்துச் சென்றதாக அமெரிக்க அதிபர் கூறினார். ஆனால், இந்தக் கூற்றை நம்பகமானதாக மாற்றுவதற்கு எந்தப் படங்களோ அல்லது AIS தரவுகளோ இல்லை. போரில், தொடர்ச்சியான நிகழ்வுகளால் உருவாகும் உண்மைகளுக்கு முன்னால் எந்த அறிவிப்புகளோ அல்லது கதைகளோ தாக்குப்பிடிக்க முடியாது. மோதலின் யதார்த்தமே எப்போதும் மேலோங்கும். டிரம்ப் தொடர்ந்து அதிகரித்து வரும் அழுத்தத்தில் இருக் கிறார்.

பிப்ரவரி 28, 2026 அன்று மோதல் தொடங்கியதிலி ருந்து, ஒரு கேலன் விலை சுமார் $1.47 உயர்ந்துள்ளது. அமெரிக்க விமான நிறுவனமான ஸ்பிரிட் ஏர்லைன்ஸை முடக்கிய ஜெட் எரிபொருள் நெருக்கடி, சீனாவால் ஓரளவு தணிக்கப்பட்ட போதிலும், தொடர்கிறது. சில மணி நேரங்களுக்கு முன்பு, சீன அரசாங்கம் மே மாதத்திற்கான 500,000 மெட்ரிக் டன் சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் ஒதுக் கீட்டிற்கு ஒப்புதல் அளித்தது.

இந்த அளவு, ஏப்ரல் மாதத்தை விட அதிகமாக இருந் தாலும், கடந்த ஆண்டு பதிவுசெய்யப்பட்ட சராசரியான 1.6 மில்லியன் டன்களை விட கணிசமாகக் குறைவாகவே உள்ளது. உரங்கள், இயற்கை எரிவாயு, ஹீலியம் மற்றும் முழு எண்ணெய் விநியோகச் சங்கிலியைப் போலவே, விமானப் போக்குவரத்து சந்தையும் தொடர்ந்து முடங்கியே இருக்கும். எமிரேட்ஸ் ஃபுஜைரா குழாய்வழியில் முதலீடு செய்தாலும், இரண்டு சிக்கல்கள் உள்ளன: இந்த உத்தியின் மூலம் முந்தைய மொத்த ஏற்றுமதியில் சுமார் 40-50% மட்டுமே பராமரிக்க முடியும், மேலும், ஃபுஜைரா துறைமுகத்தையும் அந்த ஜலசந்தியின் மூடல் மண்டலம் உள்ளடக்கியுள்ளதாக ஈரான் அறிவித்துள்ளது.

மே 4 ஆம் தேதி, துறைமுகத்திலிருந்து 75 கடல் மைல் தொலைவில் 2 எமிரேட்ஸ் கப்பல் தாக்கப்பட்டது. டிரம்ப் இதற்கு நேர்மாறாகக் காட்ட முயன்றாலும், அவர் தொடர்ந்து அழுத்தத்துடனும் குறைவான வாய்ப்புகளுடனும் இருக்கிறார்.

அவர் ஆக்ரோஷமான, குறுகிய காலத் தாக்குதல் களை நம்பி தனது அசல் தவறை மீண்டும் செய்வார் என்று நான் நம்புகிறேன். சகதியிலிருந்து தப்பிக்க, ஒருவர் தனது எடையை அதன் மேற்பரப்பில் பரப்ப வேண்டும்; தீவிரமான படைபலமே தீர்வு என்று நம்புபவர்கள் மேலும் ஆழமாக மூழ்க முனைகிறார்கள். இந்தச் சூழலில், டொனால்ட் டிரம்ப் ஒருங்கிணைக்கிறார், நெதன்யாகு முடிவெடுக்கிறார், உலகம் துன்பப்படுகிறது.

• • •

## தெற்கில் வைரஸ் ... தொடர்ச்சி...

இந்நிலையில், எதிர்காலத்தில் குறித்த பாடசாலை களை மீண்டும் திறப்பது தொடர்பான தீர்மானம், சுகாதாரத் துறையின் மேலதிக அறிவுறுத்தல்களின் அடிப்படையில் எடுக்கப்படும் என்று தென் மாகாண கல்விச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .




# தாயகமும் வாழ்வும்





